ASSC
ANNAI SRI SARADA CENTRE

# மங்கையர் எழுச்சி

ஆற்றல்மிக்க பெண்மை அறிவார்ந்த சமுதாயம்



Annai Sri Sarada center, Puthukkudiruppu, Mullaitivu

# மங்கையர்
# எழுச்சி

அம்மா என்று அழைத்துக் கொண்டு என்னிடம் வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் என் பிள்ளைகளே.

– தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி –



# பொருளடக்கம்


**1. ஆசிச் செய்திகள்**

**2. வாழ்த்துச் செய்திகள்**

**3. கனவு மெய்ப்பட... ஒரு புதிய விடியல் !**

3.1 அறிவார்ந்த சமுதாயத்திற்கான ஒரு வழிகாட்டி..
3.2 அறிமுகம் : எங்கள் நோக்கம் மற்றும் இலக்கு
3.3 எங்கள் நிலையத்தில் ஒரு நாள்: கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்
3.4 தொடர்ச்சியான செயற்பாடுகளும் தேவைகளும்
3.5 எங்கள் எதிர்காலத் திட்டம் : அன்னை சாரதா அருள்வளாகம்
3.6 முழுமையான வளர்ச்சிக்கான தூண்கள்
3.7 புதிய கட்டிடமும் அதன் முன்னோடிகளும்

**4. கற்றல் மேம்பாடும் வறுமை ஒழிப்பும்**

4.1 நோக்கம்
4.2 வரலாறு
4.3 எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் நிர்வாக கட்டமைப்பு
4.5 கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர் விபரம்
4.6 இணைக்கப்பட்ட பிள்ளைகளின் உயர்ச்சி எண்ணிக்கை விபரம்
4.7 எமது நிலையத்தின் இதுவரையான கற்றல் நிலை அடைவு
4.8 சிறப்பு தேர்ச்சி
4.9 அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் நடைபெறும் செயற்பாடுகள்

**6. எனது அனுபவமும் எனது ஆவலும்**

**7. புகைப்பட தொகுப்பு**

7.1 அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையத்தின் உருவாக்கம்
7.2 சமுகப்பணி
7.3 அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையம் 2021ம் ஆண்டு திறப்பு விழா
7.4 அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் நிர்வாகத்தினர்
7.5 அன்னை ஸ்ரீ சாரதா நிலைய ஆசிரியர்கள்
7.6 மாணவர்கள்
7.7 பயிற்சி மற்றும் பேட்டிகள்

**9. அன்னை ஸ்ரீ சாரதா அருள்வளாகம்**

**ASSC**
**ANNAI SRI SARADA CENTRE**

# மகுடவாக்கியம்

## Motto

**ஆற்றல்மிக்க பெண்மை, அறிவார்ந்த சமுதாயம்**
**Empowered Womanhood, Enlightened Society**

# தூரநோக்கு

## Vision

**பண்பாட்டில் வேரூன்றி, அறிவால் உயர்ந்து, ஆளுமையால் மிளிரும் தன்னிறைவான பெண் சமூகம்.**

**A self-reliant women society, rooted in culture, elevated by knowledge, and shining with leadership.**

# பணி இலக்கு

## Mission

**பெண்களுக்கான நவீன கல்வி, தொழில் நுட்பப் பயிற்சி, மற்றும் வாழ்வாதார வழிகாட்டல்களைப் பண்பாட்டு விழுமியங்களுடன் ஒருங்கிணைந்து வழுங்குவதன் ஊடாக, அறிவு, மனவலிமை மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் கொண்ட ஆளுமைமிக்க பெண் தலைமுறையை உருவாக்குதல்.**

**To create an empowered generation of women possessing knowledge, mental resilience, and economic independence by providing modern education, technical training, and livelihood guidance integrated with cultural values and self-defense skills.**

# ஆசிச்செய்தி

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 011-2588253 & 2361438
Email - rkmcey@gmail.com
Website - www.rkmceylon.org
Blog - http://rkmceylon.blogspot.com

## ஆசிச்செய்தி

முல்லைத்தீவிலுள்ள அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், கற்றல் மேம்பாட்டு நிலையம் ஒன்றை திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் பின்தங்கிய பெண் பிள்ளைகளது ஆன்மிக மற்றும் அறிவு வளர்ச்சிக்காக கடந்த 16 ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளை செய்துவருகிறார்கள். அவற்றில் ஒரு பகுதியாக இந்த கற்றல் மேம்பாட்டு நிலையம் அமைகிறது.

நமது நாடு பின்தங்கியதற்குக் காரணம் பெண்களை புறக்கணித்ததே என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். முற்காலத்தில் பெண்கள் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அந்நியர் ஆட்சிக்காலத்தில் பல்வேறுகாரணங்களால் அவர்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்டு வீட்டு வேலைகளுடன் அவர்கள் வாழ்க்கை ஒடுங்கிவிட்ட்து.

வேத காலத்தில் கார்கி, மைத்ரேயி போன்ற ஆன்மிகத்துறையில் சிறந்து விளங்கிய பெண்களுடன், மத்திய காலங்களில் பாரதி போன்ற தத்துவ ஞானிகளும், சமீபகாலங்களில் ஜான்சி ராணி போன்ற வீராங்கனைகளும் சிறந்து விளங்கியுள்ளனர்.

சமீபகாலங்களில் Women Empowerment - பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற பெயரில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. ஆனால் இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்ரீ ராமகிருஷ்ணர் , ஸ்ரீ சாரதா தேவியார், விவேகானந்தர் ஆகியோர் பெண்கள் முன்னேற்றத்திற்கு அடிக்கல் நாட்டிவிடடார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்கள் அதனை செயலிலும் காட்டியுள்ளனர் என்பது மிகவும் ஆச்சரியமான விடயம்.

சுவாமி விவேகானந்தர் பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றி பல விடயங்களை எடுத்துச் சொன்னது மாததிரமல்ல, பெண்களுக்கான ஒரு நிறுவனத்தை அமைக்குமாறு அறிவுறுத்தியிருக்கிறார். அதன்படி ஆரம்பிக்கப்பட்டதுதான் ஸ்ரீ சாரதா மடம். இதன் மூலம் அவர்களுக்கு துறவறத்திலும் பங்கு அளித்துள்ளார்.

விவேகானந்த சமுதாய அறக்கடடளையின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் இந்நிலையத் திறப்புவிழாவை முன்னிட்டு ‘மங்கையர் எழுச்சி’ என்ற பெயரில் ஒரு மலரை வெளியிட உள்ளனர். மலர் சிறப்பாக அமையவும், திறப்பு விழா பெண்கள் முன்னேற்றத்திற்கு ஒரு உந்துசக்தியாக அமையவும் எனது வாழ்த்துக்கள். ஏற்பாடு செய்யும் நிறுவனத்தினருக்கு திருமூவர் ஆசீர்வாதம் என்றும் இருக்கட்டும் !

இங்ஙனம்

சுவாமி அக்ஷராத்மானந்த

(சுவாமி அக்ஷராத்மானந்த)
தலைவர்

கொழும்பு
11 – 02 – 2026






# ஆசிச்செய்தி

முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் எதிர்வரும் 2026.03.04ஆம் திகதி வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது என அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

அன்னை ஸ்ரீ சாரதாதேவி அவர்களது பிறப்புடன் பெண்கள் முன்னேற்றத்திற்கான காலம் தொடங்கியது எனலாம். அவரை ஸ்ரீ ராமகிருஸ்ணர் வழிபட்டதன் மூலம், பெண்கள் வழிபடத்தக்கவர்கள், அவர்களை ஒதுக்கி வைக்கலாகாது என்ற கருத்து சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் உயர்த்தப்பட்டால்தான் சமுதாயம் உயரும் என்பதை சுவாமி விவேகானந்தரும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு பகுதியில் அமைந்துள்ள அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், பாடசாலை செல்லும் மாணவிகளுக்குத் தேவையான கல்வி உதவிகளைச் செய்து கொடுப்பதோடு, அவர்களுக்கு ஒருவேளை உணவும் தந்து, அவர்கள் நற்பண்புகள் உடையவர்களாக வளரத் தேவையான பயிற்சியும் அளிப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்னை ஸ்ரீ சாரதா நிலைய சேவைகள் என்றும் தொடர அன்னையின் அருளை வேண்டுகிறோம்!

சுவாமி ஆத்மகனானந்தா
ஸ்ரீ ராமகிருஸ்ண மடம்,
சென்னை,
இந்தியா.





# ஆசிச்செய்தி

**RAMAKRISHNA MISSION**
(ASHRAMA AND CHILDREN'S HOMES)
Ramakrishnapuram, Batticaloa - 30000
0094-65-2222752 0759445309 batticaloa@rkmm.org rkmbatticaloa.org

## ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடக்கே புதுக்குடியிருப்பில் பெண் பிள்ளைகளைக் கற்றலிலும், நன்னடத்தையிலும் ஆளுமை மிக்கவர்களாக மாற்றும் உயரிய நோக்கில் கடந்த 2019ம் ஆண்டு அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையமானது ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையத்திற்கான நிரந்தரக் கட்டிடமானது இலண்டனைச் சேர்ந்த புலம்பெயர்ந்த உறவுகள் சிலரது கூட்டு முயற்சியினால் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது என அறிந்தோம். இந்நிலையத்தின் திறப்புவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள **“மங்கையர் எழுச்சி”** மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்கமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னை ஸ்ரீ சாரதா நிலையமானது பெண்களுக்கான வான்மை விருத்தியோடு சார்ந்து பொருளாதார மேம்பாடு மற்றும் பெண் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக ஆதரவற்ற மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான கல்விச் சேவை முன்னெடுப்புகள், இது தவிரவும் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுத்து வருவதை நாம் பூரணமாக அறிந்து அதை மிகவும் அன்போடு பாராட்டுகின்றேன்.

SWO சமூக நலச் சேவைகள் நிறுவனத்தை நிறுவித்த திரு சற்குணேஸ்வரன் அவர்கள், மட்டக்களப்பில் விவேகானந்தத் தொழில்நுட்ப கல்லூரியை மிகச் சிறப்பாக நிர்வகித்து, அதோடு பல கிளை நிறுவனங்களையும் நிர்வகித்து வருகின்ற திரு பிரதீஸ்வரன் போன்றவர்களுடைய அரிய முயற்சியும், லண்டன் ஸ்ரீ கனகதுர்கை அம்மன் தேவஸ்தானம் பெருமக்களுடைய அயராத உழைப்பும், முயற்சியும் இந்த புதிய நிறுவனத்தை, அன்னை சாரதா தேவியார் பெயரிலே ஆரம்பித்து ஒரு அரிய தொண்டை நிகழ்த்தி வருவதை நாம் மனமார பாராட்டுகின்றோம்.

மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகின்றவன் சமுதாய முன்னேற்றம் என்கின்ற தொனிப்பொருளில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களையும் முன்னேற்றக் கடமைப்பட்டிருக்கின்றான். அவ்விதம் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் ஒரு குழுவாக சமுதாயமாக இணைந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில், முன்னேற்றக்கரமான தர்மம் சார்ந்த பின்புலமாகவும் அமைகின்றனர். ஆகவே இப் பாரிய முன்னெடுப்பு அனைவருக்கும் முன்னோடியான ஒன்று என்பதை இவிடத்தில் பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆத்துடன் அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் திறப்புவிழா நிகழ்வுகள் இனிதே நடைபெறவும், இந்நிகழ்வையொட்டி வெளியிடப்படவுள்ள **“மங்கையர் எழுச்சி”** நூல் வெளியீடு இனிதே நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அருள்மிகு அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.


வணக்கம்.

இறைபணியில்,

12.02.2026

(சுவாமி நீலமாதவானந்தர்)
பொது முகாமையாளர்

General Manager
RAMAKRISHNA MISSION
Ashrama & Children Homes
Ramakrishnapuram
Batticaloa.





# ஆசிச்செய்தி

RAMAKRISHNA SARADA MISSION
(LANKA BRANCH - INCORPORATED BY ACT NO. 1 OF 2012)
52/1, Vivekananda Road, Colombo-06, Sri Lanka.
Tel: 011-2361211 | E-mail: ceysara@gmail.com
Branch: RAMAKRISHNA SARADA MISSION CHILDREN DEVELOPMENT CENTRE
20/10, Krigalpotha, Palapathwela, Matale. Tel: 066 392 5241 WhatsApp No: 077 385 9181 E-mail: ceysara@gmail.com

பிரார்த்தனை 10 | 02 | 2026

முல்லைத்தீவில் அமையப்பெற்ற ஸ்ரீ அன்னை சாரதா நிலையத்தின் புதிய கட்டட திறப்புவிழா எதிர்வரும் **04/03/2026** நடைபெற திருவருள் கூடியுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அந்த சுப தினத்தன்று வெளியிடவுள்ள "மங்கையர் எழுச்சி" என்ற சிறப்பு மலருக்காக வாழ்த்துச் செய்தி அளிக்க திருவருள் கிடைத்தது மிகப்பெரிய பாக்யமே.

"வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதை விட தேய்ந்து அழிந்து போவதே மேலானது. அதிலும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காக அழிந்து போவது மிகவும் நல்லது" என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்தினை, உண்மையான ஈடுபாட்டுடன் அர்ப்பணிப்புடன் பின்பற்றி "ஜீவ சேவையே சிவ சேவை" என்ற நோக்கில் தனது அந்த சேவையையே ஒரு வழிபாடாகச் செய்யும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை மற்றும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், சேவை, தளராத நம்பிக்கை, நெஞ்சுரம் மற்றும் வாழ்வை பற்றிய நேர்மறையான கண்ணோட்டம் இவற்றை வலியுறுத்தியபடி மேன்மேலும் உயர்வடைய பிரார்த்திக்கிறோம்.

சுவாமி விவேகானந்தர், நமது "நான்" என்ற தனித்துவத்தின் உண்மையான பரிமாணத்தைப் பற்றி விளக்கும்போது, "இல்லை" என்று ஒரு போதும் சொல்லாதே. "என்னால் இயலாது"என்று ஒரு நாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும் கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்க கூடியவன். சர்வவல்லமை படைத்தவன் நீ, என்கிறார். அதாவது சிறிய நான் என்ற நம்மை எல்லா விதத்திலும் புலன்களுக்கு அடிமைப் படுத்துகின்ற தாழ்ந்த பரிமாணத்திலிருந்து நமது உயர்ந்த உண்மை இயல்பான கடவுளின் குழந்தைகள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள் என்ற நிலையை நோக்கிய பயணமே நமது வாழ்வின் லட்சியம் எனலாம்.

இந்த ஆன்மீகத்தின் அவசியத்தை வலியுறுத்தியே பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், வாழ்வின் பல முன்னேற்றங்கள் பூச்சியங்களுக்கு சமமானவை. பூச்சியங்களுக்கு என தனி மதிப்பு இல்லை. அவற்றிற்கு முன்னால் ஒன்று என்ற இலக்கம் தான் இறைவன். அந்த ஒன்று என்ற இலக்கத்தை இட்டு அதன் பின்னர் எத்தனை பூச்சியங்களை இடுகின்றோமோ அந்த இலக்கத்தின் மதிப்பு கூடுகிறது, என்று கூறுவார். ஆனால் இன்றோ, வெறும் இயந்திரங்களைப் போல் பிறந்து, வாழ்ந்து, சில தேர்வுகளில் தேறி, பண்பு நலமில்லாத, ஆன்மீகம் என்பதின் சுவடும் அறியாத மனித பதர்களே, சமுதாயத்தில் பெருகி வருகின்றனர்.

இக்காலகட்டத்தில், ஏழையான, தாழ்ந்த, ஒதுக்கப்பட்ட மகளிரிடம், எழுந்திருங்கள், விழித்துக்கொள்ளுங்கள், கருதிய கருமம் கைகூடும்வரை அயராது உழைத்திடுங்கள், என்ற சுவாமி விவேகானந்தரின் அறைகூவலைக் கொண்டு செல்ல பாடுபடும் தங்கள் நன்முயற்சி சிறக்கட்டும் என்று பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தரின் திருவடிகளில் பிரார்த்திக்கிறோம். நன்றி.



இப்படிக்கு,
அன்னையின் திருப்பணியில்,

RAMAKRISHNA SARADA MISSION
(LANKA BRANCH)
(Incorporated by Act No. 1 of 2012)
52/1, Vivekananda Road,
Colombo-06



# வாழ்த்துச்செய்தி

சிறுவர் வாழ்வில் ஒளி கொடுக்கும் விளக்காக
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் திகழ்ந்திட மனதார வாழ்த்துகின்றேன்.

பெண் பிள்ளைகளின் வாழ்வு சிறக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் சேவைகளினை சொற்களால் வடிவமைத்து வெளியுலகிற்கு வெளிச்சமிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கான நல்லாசிகளை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னை ஸ்ரீ சாரதா நிலையமானது புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவில் யுத்தத்தினாலோ, இயற்கை அனர்த்தங்களினாலோ பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த பெண் பிள்ளைகள், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள், மாற்றுத்திறனாளிகளின் பெண் பிள்ளைகள் போன்றவர்களது இருண்ட வாழ்வினிலே ஒளியேற்றும் நோக்கோடு ஒரு சிறுவர் இல்லமாக உருவாக்கப்பட்டமையினை நான் நன்கறிவேன்.

பாடசாலைக்கு பின்னர் மதிய நேர போசாக்கு நிறைந்த உணவு வழங்கல், சிறந்த கற்றல், கணினிப் பயிற்சி, வாழ்வியல் திறன் பயிற்சி மற்றும் யோகா கலைகளை ஊக்குவித்தல், விடுமுறை நாட்களில் சிறுகைத்தொழில் பயிற்சி போன்றவற்றை வழங்குதல், மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் வரை அப் பெண் பிள்ளைகளை கற்றலிலும் நன்னடத்தையிலும் சிறந்த ஆளுமை மிக்க செல்வங்களாக மாற்றி வரும் தங்களது தொடர்ச்சியான சேவைகளினை எண்ணி நெஞ்சம் நெகிழ்கின்றேன்.

பெரும்பான்மையான மனிதர்கள் சுயநலனை மட்டுமே தம் இலக்காகக் கொண்டு வாழ்ந்து முடிவதை நாம் தற்காலத்தில் தாராளமாகவே காண்கின்றோம். ஆயினும் மிகச் சிலரே பிறர் நலன் கண்டு சமூகப்பற்றோடு வாழ்கின்ற தன்மையினைக் காணலாம். அவ்வாறான எண்ணங்கள் படைத்த சில கொடையாளர்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டு அவற்றினூடாகவே பல்வேறு நலத் திட்டங்கள் இவ் அமைப்பினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு இந் நிலையமானது இன்று அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையமாக கூட்டு முயற்சியின் பயனுடன் நிரந்தர கட்டடமாக
மிளிர்கின்றமை இப்பிரதேச மக்களுக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகும்.

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் இன்புற்றிருக்க வேண்டுமென்பதே இறைதர்மமாகும். அவ் வகையில் அறப்பணியாற்றும் இவ் அமைப்பினால் மலரும் இவ் வெளியீடானது அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை மேம்படுத்தி முயற்சியாண்மையினைத் தூண்டி அவர்களது ஒளிமயமான எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டும் கலங்கரை விளக்காக அமையுமென எண்ணுகின்றேன். அத்துடன் இந்நூல் வெளியீடானது எதிர்கால முயற்சிகளுக்கான படிக்கற்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் பணிகள் தொடரவும் இலக்குகள் மற்றும் எண்ணங்கள் யாவும் செயல் வடிவம் பெற்று தங்களது சமூக சேவைகள் மற்றும் ஆன்மீகப் பணிகள் யாவும் சிறக்க, எனது ஆசிகளையும் பாராட்டுக்களையும் உரித்தாக்கி மாறிவரும் எதிர்கால உலகை வலுமிக்க சமூகமாக வெற்றி கொள்வதற்கும் இவ் அமைப்பின் சேவைகளை ஏனையோருக்கு முன்னுதாரணமாக்கி ஊக்கப்படுத்தும் நோக்கிலும் இந் நூல் மலர வேண்டுமென இறையாசி வேண்டி தொடர்ந்தும் தங்களது சேவைகள் கிடைக்க வேண்டுமென வாழ்த்தி இம்மலர் சிறப்புற வெளிவர அயராது உழைத்த நிலையத்தின் அனைத்து உள்ளங்களிற்கும் எனது நல்லாசிகளையும் நன்றிகளையும் அன்போடு நவில்கின்றேன்.

“மக்கள் சேவையே மகேசன் சேவை”



அ.உமாமகேஸ்வரன்,
மாவட்ட செயலாளர், அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.



# வாழ்த்துச்செய்தி

அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையம்.

2019 ஆம் ஆண்டிலிருந்து சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையம் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த பெண் பிள்ளைகளில் கல்வி மற்றும் ஆளுமை மேம்பாட்டு நடவடிக்கைக்காக தன்னாலியன்ற பணியை ஆற்றி வருவது போற்றத்தக்கது. தற்போதைய சூழ்நிலையில் இந்நிலையத்தின் இத்தகைய பணி மிக மிக அவசியமானதொன்றாகும். இந் நிலையம் இதுவரை மிகுந்த சிரமத்தின் மத்தியில் வாடகை அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களில் இயங்கி வந்தது.

இத்தகைய சூழ்நிலையில் இலண்டனை சேர்ந்த புலம்பெயர் உறவுகள் சிலரது கூட்டுமுயற்சியினால் ஓர் கற்றல் மேம்பாட்டு நிலையம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியான ஓர் விடயமாகும். இது இந்நிலையத்தின் வருங்காலச்செயற்பாடுகளுக்கு மிகவும் வலுச்சேர்க்கும் ஒரு அங்கமாகும். இந்நிலையத்தை உருவாக்க நிதி ரீதியாகவும் பிற வழிகளிலும் பங்களிப்புச்செய்த அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளராக இருந்த காலத்தில் இந்த நற்பணி தொடங்கியமையும் எனக்கு மிகுந்த மனமகிழ்வையளிக்கின்றது.
பாரதியாரின்
“இன்னரும் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர் தண்சுனைகள்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்”
என்றவாறான புண்ணிய காரியங்களுடன் வைத்து எண்ணக்கூடிய ஒரு அறப்பணியாக இதனையும் நாம் கொண்டாடுவோம். அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையம் எம் பகுதி மகளிரின் வாழ்வை எதிர்காலத்தில் மிளிரச்செய்யும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

சி.ஜெயகாந்த்
மேலதிக மாவட்டச்செயலாளர் (காணி)
மாவட்டச்செயலகம்
முல்லைத்தீவு.







# வாழ்த்துச்செய்தி

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினரால் இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி அனுசரணையுடன் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையமானது எமது செயலகத்தினால் வழங்கப்பட்ட காணியில் புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் அழகாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையத்தின் திறப்புவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன். அனர்த்தங்களினால் பெற்றோரை இழந்த, வறுமைக்கோட்டிற்குட்பட்ட பெண்பிள்ளைகளை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இக்கற்றல் நிலையமானது போசாக்கு நிறைந்த மதிய உணவு, சிறந்த கற்றல் வாய்ப்பு, கணினிப் பயிற்சி, வாழ்வியல் திறன் பயிற்சி, யோகா, கராத்தே கலைப் பயிற்சி ஆகியவற்றையும் பயிற்றுவித்து வருகின்றது. இப்போது நிலையான கட்டிடம் ஒன்றினையும் கட்டி பெண்பிள்ளைகளின் வாழ்வில் அடித்தளத்தையும் இட்டுள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேம்பாட்டுக்கான நிலையான, "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."என்று பாரதி சொன்னான். ஏழைக்கு எழுத்தும் வாழ்வியல்

திறன்களும் ஆரோக்கிய பாதுகாப்புத்திறன்களும் அளிப்பதோடு ஏனைய தருமங்களையும் ஒளிர வைக்கும் இக்கற்றல்நிலையத்தின் மாண்பு ஏனைய கற்றல்நிலையங்களுக்கும் வழிகாட்டும் இயல்புடையது. ஏனைய அறக்கட்டளைகளுக்கும் பெண்கள் நாட்டின் கண்கள் என்று சொல்வதோடு முடிந்துவிடும் வார்த்தைப் பந்தலுக்கு அப்பால் அக்கறையோடு முன்னெடுக்கப்படும் இச்செயற்றிட்டங்கள் வணக்கத்திற்குரியவை. ராமகிருஸ்ண இயக்கத்திற்கு முதல் விதையை இட்ட "சங்க ஜனனி" என்று சிறப்பிக்கப்பட்ட அன்னை சாரதா தேவியின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இக் கற்றல்நிலையம் அன்னையின் இயல்புடனும் ஆற்றல் தன்மையுடனும் உறுதியான கொள்கையுடனும் எமது பிரதேச செயலக பிரிவில் பயணித்துக்கொண்டிருப்பது பிரதேச செயலாளர் என்ற வகையில் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இக்கற்றல் நிலையத்தில் கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதும் சுய இயங்குதிறனுக்கான ஆற்றல்களைப் பெறுவதும் பாதுகாப்பும் ஆரோக்கியமும் மிகுந்த பிள்ளைகளாக வளர்வதும் நிலையத்தாரின் சாதனைகள் என்பேன். இச்சாதனைப் பயணம் இன்னும் தொடரவேண்டும். நாடுமுழுவதும் நற்சேவையை அன்னையின் பெயரால் இவர்கள் இயற்றவேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
புதுக்குடியிருப்பு.





ASSC
ANNAI SRI SARADA CENTRE

# வாழ்த்துச்செய்தி

அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அன்பு உறுப்பினர்களுக்கு, அளப்பரிய சேவை ஆற்றும், அன்னன ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அறங்காவலர்களுக்கும் பணி புரிபவர்களுக்கும் முதற்கண் எமது பாரட்டுக்கள்.

உங்கள் புதிய நிரந்தர கட்டடத்தின் திறப்பு விழாவினையும் மங்கையர் எழுச்சி மலர் வெளியீட்டினையும் முன்னிட்டு, எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். மேலும், நாம் இந்த திட்டத்திற்கு சிறிய அளவில் பங்களிப்பு செய்யும் வாய்ப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம். 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த நிலையம் கடின சூழ்நிலைகளில் வாழும் பெண் பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் விளக்காக இருந்து வருகிறது. அத்தோடு இந்த நிலையம், இன்று பல குடும்பங்களின் எதிர்காலத்தை ஒளிரச் செய்து வருகின்றது.

பாடசாலைக்குப் பிறகு சத்தான உணவு, தரமான கல்வி, கணினி பயிற்சி, வாழ்வியல் திறன் பயிற்சி, யோகா, கராத்தே, மேலும் விடுமுறை நாட்களில் சிறு கைத்தொழில் பயி-ற்சி என பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியை நோக்கி நீங்கள் செய்து வரும் பணிகள் பாராட்டத்தக்கவை. 35 பிள்ளைகளுடன் தொடங்கிய இந்த நிலையம் இன்று 61 பிள்ளைகளின் கல்விப் பயணத்தை வழிநடத்தி வருவது மிகுந்த பெருமையே.உங்களுடைய வழி நடத்தலால் மாணவர்கள் பல போட்டிகளில் பதக்கங்கள் பெற்றதும், பல்கலைக்கழக வாய்ப்பு கிடைத்ததும் மிகவும் பாராட்டதக்கது.

அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தைத் தொடர்ந்து பெண் பிள்ளைகளின் கல்வி, நன்னடத்தை, ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றில் முன்னோடியாகத் திகழ எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்களுடைய இல்லம் ஒரு கட்டடம் மட்டுமல்ல, பல தலைமுறைகளின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையின் அடித்தளம். சிறுமிகளைக் கண்களைப் போல் பாதுகாத்து எதிர்காலத்திற்கு வேண்டிய அறிவையும் திறமையையும் நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் உடைய பெண்களை உருவாக்கும் சேவைக்கு எமது மனமார்ந்த நன்றி.

மேன்மை பொருந்திய நற்பணியில் ஈடுபட்டிருக்கும் இந்நிலையத்தின் சேவைக்கு எமது மனமார்ந்த நன்றி. மேலும் இந்த உன்னதமான சேவை வளமாக நடைபெற்று சமுதாயமும் நாடும் போற்றகூடிய பெண்களை சமூகத்திற்கு வழங்க வாழ்த்துகிறோம். நற்பணி வாழ்க வளர்க.

அன்புடன் மற்றும் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளுடன்..
இப்படிக்கு
தியாகராஜ உமாசுதன் குடும்பம்
(London UK).





# வாழ்த்துச்செய்தி

இன்று அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் திறப்பு விழாவை கொண்டாடும் இந்தத் தருணம், பெருமையும் அர்த்தமும் நிறைந்த ஒரு முக்கியமான மைல்கல்லாகும். புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள, கல்வி மேம்பாட்டு வாய்ப்புகள் மிகவும் தேவைப்படும் மாணவர்களுக்காக இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் தனது பயணத்தை 2019 ஆம் ஆண்டு ஒரு உயரிய நோக்கத்துடன் ஆரம்பித்தது. அதாவது, உள்ளூர் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு மேலதிக கல்வி உதவியும் மதிய உணவும் வழங்குதல். காலப்போக்கில் இந்த திட்டம் பெரிதும் வளர்ச்சி பெற்றதால், தேவையான வசதிகள் இல்லாத காரணத்தால், சில சமயங்களில் மரங்களின் கீழ் வெளிப்புறங்களில் பாடங்கள் நடத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

உறுதியான முயற்சிகளுடனும், தயவான நன்கொடையாளர்களின் ஆதரவுடனும், இந்த திட்டத்தை நாம் ஆரம்பித்து தேவையான நிதியை திரட்டி, இன்று முழுமையான கற்றல் வசதிகளுடன் கூடிய கட்டிடத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம் என்பது எங்களுக்குப் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியும் அளிக்கிறது.இந்த முயற்சி பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்தி, அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், எதிர்காலத்தில் பல்கலைக்கழகக் கல்வி நோக்கி நம்பிக்கையுடன் பயணிக்கவும் உதவும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.இந்த கனவு நனவாகக் காரணமான அனைத்து நன்கொடையாளர்களுக்கும், சாரதா நிலைய நிர்வாக பணியாளர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், மற்றும் பெற்றோர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துகள்.
நன்றி
குணரட்ணம் அருணகுமார்,
ஐக்கிய இராட்சியம்.





# வாழ்த்துச்செய்தி

எங்கள் தாயகத்தில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக, நாங்கள் புலம் பெயர்ந்தோம். நாடுவிட்டு, நாடு வந்தோம். எங்கள் சொந்த பந்துக்கள், மித்திரர்கள், தாயகத்தின் உறவுகள் மட்டுமன்றி, எங்கள் தோட்டங்களையும் கைவிட்டே புலம் பெயர்ந்தோம்.ஆனாலும், கண்டதே காட்சி, கொண்டதே கோலமாக நாங்கள் இங்கு வாழவில்லை. அன்றாட வாழ்க்கைப்போராட்டத்தின் மத்தியில், எமது பண்பாடுகள், கலாச்சார விழுமியங்கள், ஆத்மீகச்சிந்தனைகள் ஆகியவற்றைக்கைவிடாது, அவற்றை அடிப்படையாகக் கொண்டே எங்களில் பலர் இங்கே வாழ்ந்துவருகின்றனர்.

“வேரோடி, விலத்தி முளைத்தாலும், தாய் வழிதப்பாது” எனப்படும். முதுமொழிக்கிணங்கவே நாங்களும் தாயகச்சிந்தனையோடு, எமது நாட்டை வந்தனை செய்தே வாழ்ந்துவருகின்றோம்.பலவித அரசியல் போராட்டங்கள், இயற்கை அனர்த்தங்கள்,அன்றாட வாழ்க்கையின் அவலங்கள் ஆகிய நெருக்கடிகளின் மத்தியில் நீங்கள் உட்பட சமூக உணர்வு கொண்ட பலரும், அனாதரவான சிலரும், இளைய தலைமுறையான பிள்ளைகளும் வாழ்ந்துவருவது நாங்கள் அறியாத விடயங்கள் இல்லை. அதுவும் போதை வஸ்து என்ற கொடிய அரக்கனின் பிடியில் எமது மாணவ சமுதாயமும், வேறு சிலரும் சிக்கித்தவிப்பதும் எங்கள் அனைவர்க்கும் தெரிய வந்துள்ளது. இவற்றைப்போக்குவதற்கு நாங்களும், நீங்களும் என்ன செய்யலாம் என்பதே தற்போது தலைதூக்கியுள்ள பாரிய கேள்வியாகும்.

புதியதோர் உலகம் செய்வோம் என்ற கோட்பாட்டுடன், உங்களைப்போன்ற சமூக சேவகர்கள் சிலர் தொண்டாற்றிவருவது எங்களுக்கு மட்டற்ற மகிழ்வைத்தருகின்றது. அதேவேளை புலம்பெயர் சமூகமாகிய நாங்களும் உங்களைப்போன்ற தொண்டர்களுக்கும், வேறு பல தொண்டு நிறுவனங்களுக்கும் தயக்கமின்றிக் கரம் கொடுப்பதும் காலத்தின் தேவையாகின்றது. இதனை மனங்கொண்டே எமது ஆலயமாகிய ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், தாயக மக்களின் மறுமலர்ச்சியான வாழ்வுக்குத் தொண்டாற்றிவருகிறது. எங்கள் ஆலயத்தின் அடியவர்கள் எமது நாட்டு மக்களுக்காகப் பலவிதங்களில், “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற நற்சிந்தனையுடன் உதவிக்கரம் நீட்டி வருகிறார்கள். இந்த வகையில், முல்லைத்தீவில் இராம கிருஸ்ண-சாமிகளின் ஆசீர்வாதத்துடன் 2019 ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட அன்னை சாரதா நிலையம் என்ற புனித இல்லத்திற்கும் அம்பிகையருளால், அடியவர்கள் காணிக்கை சொரியத்தலைப்பட்டது. ஆலயத்தின் அப்போதைய நிர்வாகசபைத்தலைவர் திருவாளர் கருணைலிங்கம் அவர்களும், அடியார்கள் சிலரும் அன்னை சாரதா இல்லம் ஆரம்ப நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

இன்று இந்த இல்லம் வசதிகள் கொண்ட ஓர் இல்லமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதற்கும் எங்கள் ஆலயத்தின் அடியார்கள் பெரும் நிதிப்பங்களிப்பைச் செய்துள்ளனர். இன்னும் சில புலம்பெயர் அன்புள்ளங்கள் இந்த இல்லத்தின் நிரந்தர அமைவுக்காக நிதிகளை வழங்கியிருப்பது மகிழ்வைத்தருகிறது. கடந்த பல வருடங்களாக அன்னை சாரதா இல்ல பொறுப்பாளர் திருமதி.ஜனனி ஜனகன் அவர்கள், இப்படியான ஓர் நிரந்தரமான இல்லம் நிறைவுபெறவேண்டுமென்ற கனவை மனதில் நிலை நிறுத்தி, அதனை நனவாக்கப் பெரும்பாடுபட்டுள்ளார் என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். திருமதி. ஜனனி அவர்களின் அயராத முயற்சிபற்றி எங்கள் ஆலயத்தின் ஆரம்ப கால நிறுவன அறங்காவலர்களில் ஒருவரான டாக்டர் பரமநாதன் அவர்கள் எங்களுக்கு எடுத்துக்கூறியுள்ளார். திருமதி.ஜனனி ஜனகன் அவர்கள் அன்னை சாரதா இல்லத்தின் பிள்ளைகளை அரவணைத்து, வேண்டிய உதவிகளையும் செய்து வருவது மிக்க மகிழ்வானது.

அன்னை சாரதா இல்லத்தின் பணிகள், ஆதரவற்ற பிள்ளைகளை மேலும் உயர்த்திவைத்து, தீபத்தின் ஒளிபோல் என்றும் வழிகாட்ட வாழ்த்துகின்றேன்.



மு. சபாரத்தினம் (சபா)
ஆலய அறங்காவலர்.
ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்.
இலண்டன்(UK)



# வாழ்த்துச்செய்தி

இன்று நாம் திறக்கும் இந்த புதிய கல்விக் கட்டிடம், வெறும் செங்கல், சுவர்கள் மற்றும் கூரை கட்டுமானமே அல்ல. இது புதுப்பிறப்பு, மனவுறுதி, நம்பிக்கை மற்றும் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு எங்கள் அர்ப்பணிப்பின் வலுவான சின்னமாகும். இந்த சமூகத்திற்கு இது மிகப்பெரிய அர்த்தம் கொண்ட நாளாகும். இந்த பகுதி நீண்டகால வறுமையையும், போதிய கல்வி வசதிகளின் பற்றாக்குறையையும் மட்டுமல்லாது, இனப்போரின் பிந்தைய விளைவுகளையும் எதிர்கொண்டுள்ளது. பல குடும்பங்கள் பொருளாதார சிரமங்கள், இடம்பெயர்வுகள் மற்றும் போரின் நீண்டகால சமூக விளைவுகளால் பாதிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில், மிகுந்த திறமை கொண்ட குழந்தைகளுக்குக் கூட தங்களின் கல்வியை முழுமையாக முன்னெடுக்க தேவையான வசதிகளும் ஆதரவுகளும் இல்லாமல் இருந்தது. இந்த சவால்களுக்கு பதிலாக உருவானது இந்த புதிய கட்டிடம், இது மறுகட்டமைப்பு, ஆறுதல் மற்றும் நம்பிக்கையின் ஒளிக்கோபுரமாக திகழ்கிறது.

வறுமைச் சுழற்சியை முறியடிக்கக் கூடிய மிக வலிமையான கருவி கல்வியே ஆகும். இந்த மாற்றப் பயணத்தில் தானதர்மத்தின் பங்கு மிக முக்கியமானது. தனிநபர்களும் நிறுவனங்களும் தங்களது பெருந்தன்மையை வெளிப்படுத்தும் போது, அவர்கள் வெறும் நிதியுதவி வழங்குவதல்ல, மனித மரியாதை, வாய்ப்பு மற்றும் தன்னிறைவை வளர்க்கின்றனர். தரமான கல்வியை வழங்குவதன் மூலம், பின்தங்கிய குழந்தைகள் அறிவு, தன்னம்பிக்கை மற்றும் திறன்களை பெற்று தங்களது காலில் நின்று தங்களுக்கும் குடும்பத்தினருக்கும் சிறந்த வாழ்க்கையை உருவாக்கும் வல்லமையை பெறுகிறார்கள்.

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோவில் அறக்கட்டளை (London Shri Kanaga Thurkkai Amman Temple Trust - LKTATT) இந்த உயரிய பணியில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, சமூகத்தை கல்வியின் மூலம் முன்னேற்ற வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் இந்த மையத்தை நிறுவியது அறக்கட்டளையின் தொண்டு முயற்சியாய் இருந்தது. இன்று கூட, இந்த புதிய கட்டிடத்திற்குத் தாராளமாக நிதி மற்றும் வழிகாட்டுதலை வழங்கி, சமூகத்தின் வளர்ச்சிக்கு எப்போதும் ஆதரவாக நிலைத்திருக்கிறது. LKTATT அறங்காவலர் குழுவின் செயலாளராக, இந்த கட்டிடத்தின் அடிக்கல் நாட்டும் பெருமைக்குரிய வாய்ப்பைப் பெற்றதிலும், எமது குடும்பத்தின் சார்பாக குறைந்தளவான பங்களிப்பை வழங்கியதிலும் நான் மிகுந்த பணிவும் மகிழ்ச்சியும் கொள்கிறேன். இது என் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரப்படும் ஒரு சிறப்பான அனுபவமாகும்.

மேலும், இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக, வெளிப்படையாக மற்றும் அதிநவீன முறையில் விரைவாக நிறைவேற்றப்பட்ட விதம் எனக்கு பெரும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. இதில் காணப்பட்ட ஒழுங்கமைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் செயல்திறன் உண்மையிலேயே பாராட்டத்தக்கது. குறிப்பாக, தளத்தில் முழு பணிகளையும் ஒருங்கிணைத்த திருமதி ஜனனி ஜனகன் அவர்களுக்கு என் இதயப்பூர்வமான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன். அவர்களின் உறுதி, திறமை மற்றும் தலைமைத்துவம் இந்த கனவை நனவாக்கியதில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்த சிறப்பான நாளில், பரம கருணையுடைய ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அவர்களின் அருளாசி இந்த புதிய கல்வி மையத்தின் மீது நிலைத்திருக்கப் பிரார்த்திக்கிறேன். இப்பகுதியின் பின்தங்கிய குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்கும் இந்த புனிதப் பணியை மையம் வெற்றிகரமாக நிறைவேற்றட்டும். பல குடும்பங்களை முன்னேற்றி, சமூகத்தை வலுப்படுத்தி, வருங்கால தலைமுறைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தட்டும்.



இந்த கல்வி தளம் எப்போதும் நம்பிக்கையுடனும், எதிர்காலத்திற்கான உறுதிமதிப்புடனும், வாய்ப்புகளின் வழிகாட்டி விளக்காக நிலைத்திருக்கட்டும்.

Dr.ச.மயூரன்,
இண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோவில் அறக்கட்டளை
(LKTATT) அறங்காவலர் குழுவின் செயலாளர்



# வாழ்த்துச்செய்தி

இந்த சாரதா நிலைய கட்டடம் என்பது கனவுகள் உருவம் பெற்று, சாத்தியங்கள் நனவாகும் ஒரு களம். உங்கள் புதிய கல்வி இல்லத்திற்கு அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

இன்று நமது புதிய கட்டடத்தில் ஒரு புதிய சரித்திரத்தின் முதல் பக்கம் தொடங்குகிறது. ஒரு உன்னதமான கதையை நாம் அனைவரும் இணைந்து எழுதுவோம். இந்த புதிய சுவர்களுக்குள் நாளைய தலைவர்களுக்கான உலகம் ஒளிந்துள்ளது. இந்த அறைகளை உங்கள் சிரிப்பாலும், தேடலாலும், கற்றலாலும், வளர்ச்சியாலும் நீங்கள் நிரப்புவதை நாங்கள் ஆவலாய் எதிர்பார்த்துள்ளோம். புதிய இடம், புதிய வகுப்பறைகள், புதிய சூழல், ஆனால் அதே திறமையான நீங்கள்! இங்கு தன்னம்பிக்கையோடு இந்த புதிய அத்தியாயத்தில் தடம் பதியுங்கள்.”

ஆசிரியர்கள் மற்றும் சேவையாளர்களே உங்கள் பங்களிப்பு மிகப்பாரியது. ஆசிரியர்கள் உயிர் கொடுக்கும் வரை ஒரு கட்டடம் வெறும் செங்கற்களும் சீமெந்தும் மட்டுமே. நமது புதிய வளாகத்தில் அர்த்தமுள்ள தருணங்கள் நிறைந்த ஆண்டாக இது அமையட்டும். இந்த புதிய சூழல் உங்கள் கற்பித்தல் ஆர்வத்தைத் தூண்டி, மாணவர்களின் வெற்றிக்கு ஒரு சிறந்த பின்னணியாக அமையட்டும். புதிய சூழல், ஆனால் நோக்கம் அதே மேன்மையானது. உங்கள் அர்ப்பணிப்புதான் இந்த கட்டடத்தை ஒரு உண்மையான “கற்றல்கூடமாக“ மாற்றுகிறது.”

நமது குழந்தைகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக இந்தப் புதிய கதவுகளைத் திறப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இந்தக் கனவை நனவாக்க உதவிய அனைவருக்கும் நன்றிகள்.”

வைத்தியகலாநிதி.வே.பரமநாதன்
இலண்டன்.

உத்வேகம் தரும் மேற்கோள்கள்
”பாடசாலை என்பது நான்கு சுவர்களுக்குள் நாளைய உலகத்தை வைத்திருக்கும் ஒரு கட்டடம்.”
லான் வாட்டர்ஸ்

”பாடசாலையின் முதல் நாள் என்பது ஒரு பெரும் சாகசப் பயணத்தின் முதல் அடியாகும்.”

”உலகத்தின் எதிர்காலம் இன்று எனது வகுப்பறைக்குள் இருக்கிறது.”
இவான் வெல்டன் ஃபிட்ஸ்வாட்டர்





# வாழ்த்துச்செய்தி

மிகுந்த நன்றியுடனும் பெரும் எதிர்பார்ப்புகளுடனும், சாரதா அன்னை இல்லத்திற்காக அமைக்கப்பட்ட இந்த புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவை நாம் கொண்டாடுகிறோம். கல்வியின் சக்தியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட பல ஒரே மனப்பான்மையுடைய நன்கொடையாளர்களின் பெருந்தன்மையால் நனவான ஒரு கனவு இது.

இந்த இடம் வெறும் செங்கல் மற்றும் சுவர்களால் ஆன கட்டிடம் அல்ல. இது வாய்ப்பின், மன உறுதியின் மற்றும் புதுக்குடியிருப்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பின்தங்கிய குழந்தைகளின் எதிர்காலத்திற்கான எங்கள் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பின் சின்னமாகும். இது கல்வி, வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான பாதுகாப்பான தங்குமிடமாக திகழட்டும். இதன் வாசலை கடக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஊக்கமும் தன்னம்பிக்கையும் பெற்று, ஒரு சிறந்த நாளையை உருவாக்க தேவையான கருவிகளைப் பெறட்டும்.

இந்த கட்டிடம் ஆர்வமுள்ள மனங்களை வளர்த்து, சமூகங்களை வலுப்படுத்தி, எண்ணற்ற கனவுகள் நனவாகும் அடித்தளமாக அமைய வேண்டும் என்பது எங்கள் மனமார்ந்த வாழ்த்து. இது வருங்கால தலைமுறைகளுக்கும் சேவை செய்து, நோக்கமும் கருணையும் கொண்டு நாம் ஒன்றிணைந்தால் அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை எப்போதும் நினைவூட்டட்டும்.

இந்த புதிய தொடக்கத்திற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள். இது சேவை செய்யும் ஒவ்வொரு வாழ்க்கையிலும் நீடித்த நல்ல தாக்கத்தை ஏற்படுத்தட்டும்.

மறைந்த எஸ். வரதராஜனின் குடும்பத்தினர்





# வாழ்த்துச்செய்தி

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் புதிய கட்டிடம் 04.03.2026 அன்று திறந்து வைக்கப்படுவதையிட்டு நான் அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நிலையம் பெண்கள் முன்னேற்றத்தை முன்னிறுத்தி செயல்பட்டு வருகின்றது. மாணவர் பருவத்திலேயே பெற்றோரை இழந்த பிள்ளைகள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பிள்ளைகளை இணைத்துக்கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

இத்தகைய சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் தனி கட்டிடத்தை அமைத்து செயல்படுத்துவது, இப்பிரதேச மாணவிகளின் கல்வி மற்றும் வாழ்வுயர்விற்கு வலுவான அடித்தளமாக அமையும் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. இதன் மூலம் இன்னும் பல மாணவிகள் பயன்பெற்று, தங்கள் எதிர்காலத்தை சிறப்பாக உருவாக்கிக்கொள்ள வழிவகுக்கும்.

இந்நிலையம் தொடர்ந்தும் பல்வேறு நலத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து சமூகத்திற்கு அரிய சேவையாற்ற இறைவனை மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி அ. கயிலாசபிள்ளை
தலைவர்
மனித நேய நம்பிக்கை நிதியம்
கொழும்பு
19-02-2026





# வாழ்த்துச்செய்தி

அன்னை ஸ்ரீ சாராதா நிலையத்தின் திறப்பு விழா

“மங்கையர் எழுச்சி”போற்றுதலுக்குரிய மாதர்கள் ஈராயிரம் ஆண்டுகள் கழித்தும் பெண்ணியலாளர்களாய், கவிஞர்களாய், சாதனையாளர்களாய் நம்மில் பலரும் வியந்து பார்க்கக்கூடிய விதத்தில் வாழ்ந்து சென்ற சங்கத்து சாதனை பெண்களை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

சங்ககாலம் குறித்து நாம் அறியக்கிடைக்கும் பிரதான மூலம் இலக்கியங்கள் மட்டுமே. ஆகவே, இந்த இலக்கியங்களை உண்டுபண்ணிய புலவர்களிடையே குறிப்பிடத்தக்க அளவு பெண்கள் உள்ளனர். ஏறக்குறைய 473 கடைச்சங்க புலவர்களிலே சுமார் 47 பேர் பெண்பாற் புலவர்கள். அதிலும் அதிகம் பாடல்களை பாடியவர் ஔவையார். சங்ககாலமோ, சமகாலமோ பெண்கள் எப்போதும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி காட்ட தயங்கியது இல்லை என்பதே உண்மை. கல்வி, விளையாட்டு, போர் என தான் விரும்பும் துறைகளில் எல்லாம் மின்னிய பெண்கள் ஏராளம்.

சங்ககாலத்து பெண்கள் வாழ்ந்த வாழ்க்கை வேறு, அங்கு அவர்களுக்கு உரிய வரங்களும் சாபங்களும் இருந்தன. இந்த காலத்து பெண்களுக்கு தங்களுக்கே உரிய வரங்களும் சாபங்களும் உள்ளன. குறைகளை தவிர்த்து நிறைவை மட்டுமே நோக்குவோமானால் சங்கத்து பெண்கள் போல இன்று நம் பெண்சமூகத்துக்கு உரியளவு சுதந்திரமும், குடும்பங்களில் அதிக முக்கியத்துவமும் வழங்குவது அவசியமாகும். இன்றைய கல்வியும், அன்றைய சுதந்திரமும் பெண்களுக்கு வாய்க்குமெனில் நிச்சயம் நம் சமூகம் வளர்ச்சிப்பாதையில் செல்லும். சங்ககாலமோ, சமகாலமோ பெண்கள் எப்போதும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி காட்ட தங்கியது இல்லை என்பதே உண்மை.

கல்வியும் கலைத்திறனும்: காக்கைப்பாடினியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார் போன்ற பெண் புலவர்கள் அறிவுத்திறன் மிக்கவர்களாக விளங்கினர். வீர உணர்வு : காவற்பெண்டு எழுதிய புறநானூற்று பாடல் (279), தன் மகன் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தாலும், அதற்காக வருந்தாமல், அவனது வீரத்தை எண்ணிப் பெருமிதம் கொள்ளும் வீரத் தாயின் எழுச்சியை வெளிப்படுத்துகிறது. தன்மானம் மற்றும் அன்பு : அவ்வையார் அதியமானின் நட்பை போற்றியது, கவிஞர்கள் பிரிவின் துயரத்தையும், காதலின் ஆழத்தையும், ஆண் புலவர்களுக்கு இணையாகப் பாடியது மங்கையரின் சுதந்திர மனநிலையை உணர்த்துகிறது. சமூக பங்களிப்பு : மங்கையர், மூதில்முல்லை, செவியறிவுறூஉ போன்ற துறைகளில் மன்னர்களுக்கு அறிவுரை கூறும் அளவுக்கு தைரியமாகவும் சமூக பொறுப்புடனும் திகழ்ந்தனர். சங்ககாலத்தில் பெண்கள் வெறும் அலங்காரப் பொருளாக இல்லாமல், சம உரிமையுடன், போர்க்குணமும், கல்வி அறிவும், சிறந்த ஆளுமையும் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை இந்தப் பாடல்கள் உணர்த்துகின்றன. எனவே எங்களது வளர்ந்துவரும் மங்கையர் அனைவருக்கும் நீங்கள் அனைவரும் உலகத்திற்கு எடுத்துகாட்டாக அமைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில்
அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன்.
அன்புடன்



திரு திருமதி மனோகரி அசோக்குமார்
இலண்டன்
04.˙.02.˙.2026



# வாழ்த்துச்செய்தி

நல்வாழ்த்துச் செய்தி
பங்குனி 04, 2026

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் திருவருளால் இந்நன்னாளில் திறக்கப்படும் இந்த இல்லம் அன்பு, அமைதி, ஆரோக்கியம், மற்றும் ஆனந்தம் நிறைந்ததாக என்றென்றும் விளங்கட்டும் !!

இங்கு அடியெடுத்து வைக்கும் அனைவருக்கும் நலம், நிம்மதி நல்லெண்ணம், மற்றும் றியின் பாதை விரிவடையட்டும் !!

இந்தக் கட்டிடம் உமைப்பின் பலனை, ஒன்றுபட்ட முயற்சியின் வலிமையை எப்போதும் நினைவூட்டும் ஒரு சிறந்த அடையாளமாக திகழட்டும் ! இந்நன்னாளில் திறக்கப்படும் இந்தக் கல்வி நிலையம் கல்வி, ஞானம், ஒழுக்கம், மெய்யுணர்வு ஆகியவற்றின் புனித ஆலயமாகத் திகழட்டும் !

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நல்லறிவு, பண்பு, திறமை, மற்றும் சமூகப் பொறுப்புடன் உயர்ந்து வளர இறைவன் அருள் புரியட்டும் ! கல்வி மூலம் உலகம் உயர, அறிவு மூலம் மனித நேயம் மலர, இந்நிலையம் என்றென்றும் புகழுடனும் பெருமையுடனும் விளங்கட்டும் ! மாணவர்கள் அனைவரும் அறிவு, ஒழுக்கம், திறமை ஆகியவற்றில் சிறந்து, கல்விப்பயணத்தில் உயர்ந்த சாதனைகள் புரிந்து, சமுதாயத்திற்கு பயனுள்ள சிறந்த குடிமக்களாக உருவெடுக்க வேண்டும் !

வாழ்க்கையில் உயர்ந்த இலக்குகளை அடைய,
எமது உளமார்ந்த நல்வாழ்த்துகள் !
நன்றிகள் !

நல்லதம்பி குடும்பம் (அமெரிக்கா)



# வாழ்த்துச்செய்தி

அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையத்திற்கான வாழ்த்து துளி

தேவையை உணர்ந்த சிந்தனை,
சேவையை சுமந்த செயல்கள்,
ஒன்றினைந்த மனங்களால்
உருவான
இந்த முயற்சி
நாளைய தலைமுறைக்கு
நிலையான பயனாக அமைய
பங்காற்றிய அனைவருக்கும்
பாராட்டுதலும்
நன்றிகளும்.

ச.சிறிகாந்தன்
இலண்டன்





ஐக்கிய இராச்சியத்தில் இருந்து

ஒரு

# வாழ்த்துச்செய்தி

துாய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் திருவருளால் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் 2019 பெற்று எம்மால் தொடங்கப்பட்ட அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கு இலண்டனில் வசிக்கும் ஒரு சில நல்லுள்ளங்களின் நிதியுதவியினால் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்படுவதனையிட்டு நாம் மிக்க மகிழ்வடைகின்றோம்.

அன்னை ஸ்ரீ சாரதா தேவி எளிமையான வாழ்வை வாழ்ந்து, நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தினார். கஷ்டங்கள் வருவது இயற்கை, ஆனால் அதைக் கண்டு அஞ்சக்கூடாது என்ற நம்பிக்கையை ஊட்டியவர். பெண்கள் இவ் உலகில் எவ்வாறு வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியவர். இந்நிலையத்தின் சிறுமிகள் மட்டுமல்ல அனைத்துப் பெண்களும் அன்னையின் போதனையைப் பின்பற்றினால் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒரு ஐயமில்லை.

தாய் என்றால் குழந்தைக்கு அன்பைப் பொழிபவள். என் குழந்தைகள் துன்பப்படுவதை என்னால் பார்க்க முடியாது எனக் கூறிய அன்னை இந் நிலையத்திலுள்ள தன் குழந்தைகள் அனைவரினதும் வாழ்வில் ஏதோ ஒரு வகையில் ஒரு பெரு மாற்றத்தினையும், முன்னேற்றத்தினையும் ஏற்படுத்துவாள் என நம்புகின்றேன்.

துாய அன்னை ஸ்ரீ சாரதா தேவி வீற்றிருக்கும் “அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்” எதிர்காலத்தில் மிகப் பெரிதாக வளர்ந்து பல்லாயிரக் கணக்கான சிறுமிகளின் வாழ்வில் ஒரு பெரு மாற்றத்தினை ஏற்படுத்தும் நிலையமாக மாறும் என்பதில் ஐயமில்லை. இப் புதிய கட்டிடப் பணிக்காக நன்கொடைகள் வழங்கிய அன்பர்களுக்கு நன்றி கூறுவதோடு, திறப்பு விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

நன்றி.



இவ்வண்ணம்,
சமூகப் பணியில்,
க.சற்குணேஸ்வரன்,

ஸ்தாபகர், அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
ஸ்தாபகர், திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம், மட்டக்களப்பு
ஸ்தாபகர், திலகவதியார் மகளிர் இல்லம், வாகரை மட்டக்களப்பு
ஸ்தாபகர், விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, மட்டக்களப்பு
ஸ்தாபகர், விவேகானந்த பூங்கா, மட்டக்களப்பு
ஸ்தாபகர், சமூக நலன்புரி அமைப்பு (SWO UK & SWO Batticaloa)



# கனவு மெய்ப்பட...
## ஒரு புதிய விடியல் !



**அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தோற்றம், அதன் அவசியம் மற்றும் எதிர்காலக் கனவுகள் குறித்து நிறைவேற்று பணிப்பாளர் திரு. க. பிரதீஸ்வரன் அவர்களின் கட்டுரை.**

**அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் :**

அறிவார்ந்த சமுதாயத்திற்கான ஒரு வழிகாட்டி..
இலங்கையின் கல்விமுறையின் சிறப்பு இன்று வரை தனியார் மயப்படுத்தப்படாமல் அனைவருக்கும் ஒரே விதத்திலான இலவச கல்வித் திட்டமாகும். இதனால் ஒரே தராதரம் பேணப்படுவதுடன் தரமான கல்வியாகவும் காணப்படுகின்றது. தெற்காசியாவிலே உயர்ந்த எழுத்தறிவு வீதம் (92% - 93%) காணப்படும் நாடாக இலங்கை காணப்படுகின்றது.

இதற்கு மிக முக்கியமான 2 காரணங்கள் உள்ளது. ஒன்று தரம் 1 தொடக்கம் தரம் 13 அதாவது க.பொ.த உயர்தரப் பரீட்சை எடுக்கும் வரைக்கும் முற்று முழுதான இலவச கல்விக் கொள்கையும் அத்துடன் இலங்கையில் நடைமுறையில் உள்ள கட்டாய கல்வி சட்டமுமே. ஆனால் உயர்தர பரீட்சை சித்தியடைந்த பின்னர், பல்கலைக்கழகத்திற்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்டளவான மாணவர்களே புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக அனுமதியினை பெறுகின்றனர். எனவே இந்த பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்ய முடியாத, மற்றும் பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட மாணவர்களிற்காக இலங்கையில் கொண்டு வரப்பட்ட அடுத்த கொள்கையே தேசிய தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வியாகும்

இதற்கு அமைவாக எமது VCOT EduTech ஆனது சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என அனைவரையும் கருத்தில் கொள்வதுடன் அவர்களிற்கு ஏற்ற வகையிலாக அமைப்புக்கள், செயற்றிட்டங்களை உருவாக்கி மேற்கொண்டு வருகின்றது. அதன் அடிப்படையில் சிறுவர்கள், மாணவர்களின் வீட்டுச் சூழல் அவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பாதிப்பினை ஏற்படுத்த கூடாது என்பதற்காக விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினை உருவாக்கி அதன் மூலமாக புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பினை பெற்று பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றது.

அது தவிர முன்னர் குறிப்பிட்டது போல் பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட அல்லது பாடசாலைக் கல்வியினை பூர்த்த செய்ய முடியாத மாணவர்களிற்காக அரச அனுமதி பெறப்பட்ட பயிற்சிகளை நடாத்தக்கூடிய விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி இரண்டினை மட்டக்களப்பில் 13 வருடங்களிற்கு மேலாக நடாத்தி வருகின்றது. இது தவிர கிராமங்களில் வழிகாட்டல் இன்றி உள்ள மாணவர்களிற்கு ஒரு வாழ்வியலையும் சிறந்த வழிகாட்டலையும் மேற்கொள்ளக்கூடிய சமுதாய கல்லூரி முறைமையினை முதன்முதலாக மட்டக்களப்பில் ஆரம்பித்து தற்போது மட்டக்களப்பு மட்டுமல்லாது திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சமுதாய கல்லூரிகளை அமைத்து மாணவர்களிற்கான வாழ்வியலையும் வழிகாட்டலையும் வழங்குகின்றோம். இதற்காக முழுநேரமாக பாடுபட்டு தன்னலமற்று பணி செய்து கொண்டிருக்கும் எமது VCOT Family இன் அனைத்து சேவையாளர்களின் தியாகங்கள் உன்னதமானது. அதன் அடிப்படையில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களை வலிமைமிக்க பெண் சக்கியாகவே உருவாக்கிக்கொண்டிருக்கும் இந்த சாரதா நிலையம் பற்றிய எனது பார்வை என்ற இந்த கனவுப் பயணங்கள் பற்றிய விடயங்களுடன் உங்களை கடந்து செல்கின்றேன்



இது தவிர பாடசாலை காலங்களில் குடும்ப வறுமை காரணமாக வறுமை கல்விக்கு தடையாக அமைந்து விடக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நேரத்தில் இந்த புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இந்த அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தினை உருவாக்கி அதற்கான காணியினைப் பெற்று தற்போது அதனுள் விரைவாக நிலையமும் திறப்படவுள்ளது இவற்றிற்கெல்லாம் அன்னையின் அருளும், சுவாமி விவேகானந்தரின் ஆசியுமே எம்மை வழிநடாத்தி செல்கின்றது என்பது எமது அடிப்படைத் தத்துவமாகும்.

## புதிய கட்டிடமும் அதன் முன்னோடிகளும்

அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் 2020 இல் இருந்து ஒரு கல்வி மேம்பாட்டு நிலையமாக செயற்பட்டு வருவதற்கு இலண்டன் கனகதுர்கை அம்மன் ஆலயம் மற்றம் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை ஆகியவற்றின் தொடர்ச்சியான நிதியுதவிகளும், தனியான நன்கொடை உறவுகளின் நிதிப்பங்களிப்பும் அத்துடன் விசேட உணவு வழங்குபவர்களின் ஆதரவுடனுமே கடந்த காலங்களில் நிலையத்தின் அனைத்து செயற்பாடுகளும் முன்னேற்றத்துடன் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதே நேரம் நிலையத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணியினுள் புதிய கட்டம் அமைக்கும் பணிக்கு பலரிடம் பல வருடங்களாக உதவி கேட்கப்பட்டு வந்த வேளையில் தான் மனிதருள் மாணிக்கமாக தனக்கென்று எதனையும் சேர்க்காது தன்னிடம் உள்ளவற்றையும் ஆலயங்கள் மற்றும் அறப்பணிகளுக்கு வழங்கிடும் தற்கால கர்ணனாக அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தினுள் காலடி எடுத்து வைத்தார் வைத்தியகலாநிதி.வேலுப்பிள்ளை பரமநாதன் அவர்கள். இவர் பல அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் எமது கோரிக்கையினைப் பரிசோதித்து யோசித்து வருகின்ற அந்த கால அவகாசத்தை எல்லாம் தாண்டி தனி ஒருவராக தனது சொந்த நிதியினை முதலில் வழங்கியதுடன் அவரது நண்பர் எந்திரி.குணரட்னம் அருணகுமார் அவர்களையும் இணைந்து அத்துடன் அவர்கள் இருவரும் என்னுடன் கலந்தாலோசித்து நேரடியாக சந்தித்துப்பேசி இந்த கட்டிட வேலையினை முன்னெடுக்க தொடங்கினர்.

இவர்களின் இந்த செயற்பாட்டினை அறிந்து இவர்களின் நண்பர்களாக திரு.பத்மனாதன் குடும்பம் மற்றும் வைத்தியகலாநிதி மயூரன் குடும்பம், திரு.வினோத் வரதராஜன் குடும்பம், என்று பலரும் இணைந்து இந்த கட்டடத்தினை சகல வசதிகளுடன் கூடிய ஒரு நவீன கற்றல் நிலையமாக உருவாக்கியுள்ளனர். எனவே இன்று சிறப்பாக காட்சியளிக்கும் இந்த கட்டடத்திற்கு இவர்களின் நிதிப்பங்களிப்பு என்பது காலத்தால் அழியாத ஒன்றாகிவிட்டது. அத்துடன் நிலையம் அமைவதற்கு வித்திட்டவர்களில் ஒருவரான திரு.க.சற்குணேஸ்வரன், ஸ்தாபகர், சமூக நலன்புரி அமைப்பு - பிரித்தானியா இல் இருந்து அன்னை சாரதாவிற்கு ஒரு நினைவாலயத்தை அமைத்து எமது இந்த அன்னை சாரதா அருள்வளாக பூமிக்கு அருள் சேர்த்துள்ளார்.

மாணவிகளே! ஆற்றல்மிக்க பெண்மையாக மிளிருங்கள். அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் என்பது ஒரு கட்டிடம் மட்டுமல்ல. இது ஒவ்வொரு மாணவியும் அறிவாலும், தன்னம்பிக்கையாலும், நற்பண்புகளாலும் வளர்ந்து மிளிர்வதற்கு உதவும் ஒரு வழிகாட்டி மற்றும் குடும்பம். உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை நீங்களே வடிவமைக்கும் பயணத்தில் எங்களுடன் இணையுங்கள். வாருங்கள், அறிவார்ந்த சமூகத்தின் ஆற்றல்மிக்க பெண்மணியாக மிளிருங்கள்.

"ஆற்றல்மிக்க பெண்மை அறிவார்ந்த சமுதாயம்"
இது முடிவல்ல, கனவுகளுடன் பயணம் தொடரும்...

K.Pratheeswaran
Executive Director,
VCOT Family,
Batticaloa.



# வாழ்த்துச்செய்தி

முல்லைத்தீவு/புதுக்குடியிருப்பு அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் சாதனைச்சுட்டிகள்

அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையமானது கொடும் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டு தாய்/தந்தையை இழந்த அல்லது மிக வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த கல்வி கற்கும் வயதுடைய பெண்பிள்ளைகளின் சிறைப்பட்ட ஆசைகளை மேலே கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் 2019ம் ஆண்டு முல்லைத்தீவு/புதுக்குடியிருப்பில் மட்டக்களப்பு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினரால் இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 61 பெண் பிள்ளைகள் எமது இல்லத்தில் கல்வி கற்று பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகின்றார்கள். அத்துடன் பிரதேச செயலாளரினால் எமக்கு கிடைக்கப்பட்ட காணியில் இலண்டன் வாழ் நலன் விரும்பிகள் சிலரின் கூட்டு முயற்சியினால் நிலையான கட்டடங்களை அமைத்துத் தந்துள்ளார்கள். இவ் அத்தனை உள்ளங்களையும் நினைவு கூரவேண்டிய பொறுப்பு நிலையத்தின் தலைவர் என்ற வகையில் எனக்குண்டு என்பதில் மகிழ்வடைகின்றேன்.

காலையில் பாடசாலைகளில் கற்றலை முடித்து வரும் பெண் பிள்ளைகளை இன்முகத்துடன் வரவேற்று ஆதரவு நல்கி அவர்களுக்கு சத்தான மதிய உணவை வழங்கிய பின் மிகப் பெறுமதியான கல்வியை வழங்குகின்றோம். பேசவல்ல திறமையான ஆசிரியர்கள் மேலதிக வகுப்பிற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள். கற்றலுடன் கணினி பற்றிய கற்பித்தல், வாழ்க்கைத்திறன் பற்றிய கற்பித்தல், ஒழுக்கநெறி சார்ந்த போதனை, உடல் உள வளர்ச்சி கருதி யோகா, பயிற்சிகள், ஆற்றுப்படுத்தவல்ல கலைதிறன் கற்றல் யாவும் திட்டமிட்ட வகையில் நடந்தேறி வருகின்றன. கற்றல், கற்பித்தல் முடிந்த பின்பு, தொழிற்பயிற்சிகள் மற்றும் தற்காப்பு பயிற்சிக்கான கராத்தே போன்ற கற்பித்தலையும் நிலையம் செய்யத் தவறவில்லை. பொருத்தமான நிர்வாக அலகு, பொருத்தமான மேற்பார்வை முறை, மதிப்பீடு என்று மிகமிக நேர்த்தியாக நிலையச் செயற்பாடுகள் மேலோங்கி வருகின்றன. இதனால் பிள்ளைகள் அதிதிறன் கொண்டவர்களாக, தேசிய பரீட்சைகளில் சாதனை படைப்பவர்களாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும், சாதனையாளர்களாக திகழ்கின்றனர். இச்செயற்பாடுகளினால் பிள்ளைகள் ஒழுக்கம் ஒழுங்குடையவர்களாக, தன்னம்பிக்கை, தலைமைத்துவப் பண்பு மேலோங்கியவர்களாக வளர்ந்து வருகின்றமை அகமகிழ வைக்கும் காரியங்களாகும். எதிர்வரும் காலங்களில் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் எண்ணங்களை நூறுவீதம் சுமக்கும் நிலையமாக எம் நிலையம் வளரும் என நம்புகின்றேன். இதற்கு காரண காரியமாக உள்ள நிதி, நிலம், ஆலோசனை திட்டம் உதவி தரும் அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் மேலான நன்றி அறிதலை தருவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.



அன்புடன்
பொன். பேரின்பநாயகம்
தலைவர்
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
முல்லைத்தீவு/புதுக்குடியிருப்பு (ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.)



# வாழ்த்துச்செய்தி

சமூக நலன்புரி அமைப்பு
SOCIAL WELFARE OGANIZATION
S.W.O
Main Street, Puthukkudiyiruppu, Batticaloa, Sri Lanka
Registered Charity No: BT / RVSS / 2013 / 01
Phone No: +94 65 2250189, E-mail:swolk.org@gamil.com, swobatti22@gmail.com

எமது நிறுவன ஸ்தாபகர் திரு.சற்குணேஸ்வரன் அவர்களால் 2019ஆம் ஆண்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ஆரம்பிக்கப்பட்ட அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் தற்போது “அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்” எனும் பெயரில் புதிய கட்டிடமாக அமைக்கப்பட்டு 04.03.2026 ஆம் திகதி திறப்புவிழா நடைபெறவுள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதோடு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த உன்னதமான பணிக்காக அனைத்து வகையிலும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கிய நல் உள்ளங்கள் அனைவரும் நீண்ட காலம் நோயின்றி ஆரோக்கியமாக வாழ இறைவன் அருள்புரிவார் என்பதில் எமக்கு எந்தவித ஐயமும் இல்லை.

அன்னை ஸ்ரீ சாரதா தேவி அன்பின் உருவமாகவும் உலக அன்னையாகவும் திகழ்ந்தவர். சகிப்புத்தன்மை, நிபந்தனையற்ற அன்பு, இறைவனைச் சரணடைவதன் அவசியம் ஆகியவற்றை அவருடைய அமிழ்தமான மொழிகள் நமக்குப் போதிக்கின்றன.அதுபோலவே, இந்நிலையத்தில், கல்வி பயிலும் பிள்ளைகளும் நிம்மதியான வாழ்விற்கான எளிய வழிகளைப்பெற்று வாழ்க்கையில் உயர்ந்து சிறந்து விளங்குவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம்.

இத்தகைய உயரிய நோக்கத்துடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை தொடர்ந்து செயற்பட்டு, பெண்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு சேர்க்கும் சேவையை சிறப்பாக முன்னெடுத்து வருவது பெருமைக்குரியதாகும்.

இந்நற்பணிகள் மேலும் பல ஆண்டுகள் சிறப்பாகத் தொடரவும், அனைவருக்கும் தெய்வத்திருமூவரின் ஆசீர்வாதம் கிடைக்கவும் மனமார வேண்டுகின்றேன்.
நன்றி.

இவ்வண்ணம்,
சமூக சேவையிலுள்ள,
திருமதி.தயனி கிருஷ்ணாகரன்
தலைவர்.



# வாழ்த்துச்செய்தி

நிலையான கல்வியும் நிலைபேறான ஆத்மீகமும் அள்ளி வழங்கும் ஸ்ரீ அன்னை சாரதா கல்வி நிலையம்

தென் பாரதத்தில் உருப்பெற்று திக்கெட்டும் பரந்து முல்லை மாவட்டம் புதுக்குடியிருப்பில் ஒளி கொடுத்து நிற்கும் அன்னை சாரதா கல்வி நிலையம் தனக்கு சொந்தமான இடத்தில் குடியமர்வதையிட்டு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நிறுவனமானது தனித்துவமாகவும் கௌரவமாகவும் நிலைபேற்றுடன் இயங்குவதற்கு அர்ப்பணிப்போடு அயராது உழைத்துவரும் நெறிப்படுத்திவரும் நிதிப்பங்களிப்பு செய்துவரும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை நிதியம் மற்றும் இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிர்வாகம் அதனோடு இணைந்த உறவுகள் அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும். நீண்டகால கொடிய யுத்தத்தால் பலவகையிலும் தமது இருப்பை இழந்த நலிவுற்ற மக்களின் பிள்ளைகளுக்கு முறையான கல்வியும் உணவும் சமநேரத்தில் அறநெறி சார்ந்த மற்றும் மானிட நேயம் சார்ந்த போதனைகளையும் மிகச்சிறப்பாக இந்நிலையம் வழங்கிவருவது பெருமைக்குரியது. மேலும் நிலையத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கு உள்ளக நிர்வாகக் கட்டமைப்பும், பணிப்பாளர் சபைத்தொகுதியும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையத்தின் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புகூறும் முறையும் நிதிக்கையாள்கையும் ஒரு அரச நிறுவனத்திற்குச் சமனாக உள்ளது. இந்நிலையத்தில் முகாமையாளர் உட்பட பணித்தொகுதியும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இன்று உலக வாழ்வில் பலதரப்பட்ட சவால்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அதீத தொழில்நுட்ப வளர்ச்சி எங்கேயோ செல்கிறது. இந்நிலை கொண்ட சமகாலத்தில் இலங்கை போன்ற எமது நாட்டில் அறம் சார்ந்த விழுமியம் சார்ந்த, பண்பாடு சார்ந்த, உலகியல் சார்ந்த எண்ணக்கருத்துக்களை மாணவர் மற்றும் மக்கள் மத்தியில் நிலையூன்றச் செய்வது அன்னை ஸ்ரீ சாரதா போன்ற நிலையங்களின் பொறுப்புமாகும். எனவே இவ்வாறான ஒரு அரும்பெரும் மனிதநேயப்பணிக்கும் மாணவர்களின் வளமான வாழ்வு வாழ்வாங்கு மேம்படவும் அரும்பாடுபட்டு இக்கட்டடம் இன்று இவ்வாறு நிமிர்ந்து நிற்க காரணமான புலம்பெயர் உறவுகளை உள்ளடக்கிய குழுவினருக்கும், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிர்வாகத்தினர் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை ஆகியோருக்கும் நன்றியும் பாராட்டுக்களும், மேலும் இந்நேரத்தில் அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் தனது நோக்கத்தையும், குறிக்கோளையும் எவ்வித இடர்களும் இன்றி வளமாக செயற்பட எனது வாழ்த்துக்கள்.

ச. நாகரத்தினம்
(ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்)
ஆலோசகர்,
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்.





ASSC
ANNAI SRI SARADA CENTRE

# வாழ்த்துச்செய்தி

பிள்ளைகளின் மலர்ச்சியும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையமும்

நேற்றுவரை புதுக்குடியிருப்பு வேணாவில் பிரதேசத்தில் நிலை கொண்டு அப்பிரதேசத்து வறுமைக்குட்பட்ட பெண்பிள்ளைகளை பொறுப்பெடுத்து வாழ்வில் அருமை மிக்க கல்வி ஒளியேற்றி மாணவர்களின் மனங்களில் உண்மையான மனிதநேயத்தையும் அறிவுத்திறனையும் வளர்த்து வரும் இந்த அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் தனக்கென்று ஒரு சொந்த காணியோ கட்டடமோ இல்லாமல் இயங்கி வந்தது. இன்று தன்னுடைய அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ளது. தனக்கெனத் தனியான நிலம் உரிமை பூண்டு இன்று தனது திறப்பு விழாவினைக் கொண்டாடுகின்றது. இந்நிகழ்வு சிறப்புற்று நடைபெற எல்லாம் வல்ல இறைவனுடைய அருளாசிகள் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர்ச்சூழல் முடிவுக்கு வந்தாலும் அவர்களில் அனேகமானோர் பொருளாதாரத்தில் பின்தங்கியே காணப்படுகின்றார்கள். வயது வந்தோருக்கு வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுத்தாலும் எதிர்கால சந்ததியினருக்கு தேவையான கல்வியை வழங்காது விடின் ஏற்படும் பயனின்மையை உணர்ந்து இந்நிலையம் வறுமைக்கோட்டில் வாழும் பெண்பிள்ளைகளின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் ஒரு பல்துறைநிலையகமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்தவகையில் போசாக்குமிக்க பிள்ளைகளாக வளர்வதற்கு போசாக்கு மிக்க உணவும், அறிவுசார் சமுகத்தை உருவாக்க கல்வியையும், உடல் உளத்தை வலுப்படுத்த யோகா கராத்தே கலையினையும், நன்நடத்தையிலும், நற்பண்பிலும் சிறந்து மிளிர வாழ்வியற்றிறன் பயிற்சியையும், கணினி யுகத்திற்கு தயாராவதற்கு கணினி அறிவினையும் வழங்கி ஆரோக்கியம் மிக்க சிறந்த நற்பண்புள்ள பெண் செல்வங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் இச் சாரதா நிலையத்தின் சேவையாளர்கள் அனைவரும் வாழ்த்தப்படக்கூடியவர்களே. அதுபோல் இப்பிள்ளைகளுக்கென்று ஒரு நிரந்தரக் காணியினை வழங்கியவர்களு-க்கும் பிள்ளைகளுக்கென்று நிலையான கட்டடத்தை கட்டிக் கொடுத்தவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாரட்டுதல்களையும் இவ்விடத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற மேலோர் கொள்கைக்கிணங்க செயற்பட்டு வரும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் பணி மென்மேலும் சிறக்க இறையாசிகளை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

செ. தங்கராஜா
தலைவர்
கோண்டாவில் ஸ்ரீ சத்யசாயி அறக்கட்டளை





# வாழ்த்துச்செய்தி

அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையத்துக்கான வாழ்த்துச்செய்திகள்

மாணவர் கல்வி, மாணவர் உணவு, மாணவர் உளவியல், மாணவர் நலனோம்பல் என்று ஏழைகள் பக்கம் கண் திறந்திருக்கும் குறித்த இந் நிலையத்துக்கு என் இனிய பாராட்டுக்கள். அடிமைப்படுத்தப்பட்ட பெண் இனம் சாதனை படைக்க வேண்டும் என்ற அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் சிந்தனையை அப்படியே இந்நிலையத்தில் நிறுத்தும் சாதனைக்கு நிகர் வேறு எதுவும் இல்லை. அத்துடன் அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள், உளவியல் சார்திறன் பயிற்சிகள், போசாக்கான உணவு என்பவற்றால் புதக்குடியிருப்பு சாரதா நிலையம் மனித விழுமிய மேம்பாட்டக்காக அதீத சேவையாற்றும் நிறுவனமாக மாறிவருகின்றது.

அங்கு அன்பு, அறிவு, தலைமைத்துவம், விட்டுக்கொடுப்பு, திட்டமிடல், குருவழிபாடு, தேசிய உணர்வு, அதன் வழி நகர்தல் என்று பலவகையான விழுமியங்கள் கட்டி வளர்க்கப்படுகின்றன. இதனால் எதிர்காலத்தில் நல்ல மனிதர்களை, நல்ல அதிகாரிகளை, நல்ல தேசிய உணர்வாளர்களை உருவாக்கும் ஒரு சாதனையகமாக புதுக்குடியிருப்பு அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையம் மிளிரும் என வாழ்த்துவதில் அகமகிழ்வு அடைகின்றேன்.

வைத்திய கலாநிதி ப. சத்தியரூபன்
(சுகாதார வைத்திய அதிகாரி
புதுக்குடியிருப்பு)





# வாழ்த்துச்செய்தி

மங்கையர் வளர்ச்சியும் வாழ்வும்

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்று அன்று கூறிய பாரதியின் கூற்றுக்கு இணங்கவும், ஆறறிவு பெற்ற மானுடப்பிறப்பாகிய நாம் இந்த மண்ணுலகில் வாழ்வது மட்டுமல்ல இந்த மண்ணுலகையும் வாழ வைக்க வேண்டும் என்ற சிந்தனைக்கு அமைவாகவும் பல பெருங்குணம் கொண்ட பேராளர்களாலும் எமது மண்ணில் 2019 ஆம் ஆண்டு பெண் பிள்ளைகளுக்கான தேவை கருதி ஆரம்பிக்கப்பட்ட "அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையம்" இன்று நிரந்தர முகவரி பெற்று, நிலையத்தின் நோக்கங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கவும், புதுக்குடியிருப்பு மண்ணில் சேவை புரியத் தயாராகி நிற்கின்றது.

"ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்"

கற்றவர்களிடத்தில் தான் அறிவையும் நன்னடத்தையையும் காண இயலும். இந்த நிலையமும் அதேபோல் இங்கு பயிலும் பெண் பிள்ளைகளுக்கு, சிறந்த கல்வியுடன், ஒழுக்கம், வாழ்வியற்றிறன் பயிற்சிகள், நவீன தொழில்நுட்பக் கல்வி போன்றன சிறப்பாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பிள்ளைகளுக்கு போசாக்கு நிறைந்த மதிய உணவு வழங்கி அவர்களுக்குரிய கல்வி வழங்கப்பட்டு வருவது சிறப்பான செயற்பாட்டைக் காணக் கூடியதாகவுள்ளது. அதுமட்டுமல்லாமல் தற்போது அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நிர்வாகி திருமதி.ஜனனி ஜனகனின் நேர்கொண்ட பார்வையும், தளராத மனமும் உறுதியான கொள்கையும் தான் இந்நிலையத்தை வழிநடத்திச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் இம்மேம்பாட்டு நிலையம் சிறந்தோங்கவும், இதன் வளர்ச்சியின் ஊடாக பிரதேச வாழ் மங்கையர்களின் வளர்ச்சியும், சிறந்த தலைமைத்துவம் கொண்டவர்களாக வாழவும் எனது வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. இந்திராணி முரளிதரன்
(ஆசிரியர், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,
ஆசிரியர், அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்)





# கற்றல் மேம்பாடும் வறுமை ஒழிப்பும்



**"தாய் என்றால் குழந்தைக்கு அன்பைப் பொழிபவள்,**
**என் குழந்தைகள் துன்பப்படுவதை என்னால் பார்க்க முடியாது"**
**–தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி–**

## நோக்கம்

யுத்தத்தினோலோ, இயற்கை அனர்த்தங்களினாலோ பாதிக்கப்பட்டு தாய் தந்தையை இழந்த பெண் பிள்ளைகள், அல்லது மிக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள், அல்லது மாற்றுத் திறனாளிகளின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகளை அடையாளம் கண்டு தரம் 08 இல் இணைத்து பல்கலைக்கழகம் செல்லும் வரைக்கும் அவர்களுக்கான போசாக்கு மிக்க மதியநேர உணவையும், சிறந்த கற்றலையும் வழங்குவதுடன் நற்பண்புகளையும், யோகா, கராத்தே போன்ற கலைகளையும் வழங்கி ஆளுமைமிக்கதோர் நல்லதொரு பெண் சமுதாயத்தை உருவாக்கிவிடுதல்.

## வரலாறு

அன்னை ஸ்ரீ சாரதா நிலையமானது புதுக்குடியிருப்பு முல்லைத்தீவில் யுத்தத்தினாலோ, இயற்கை அனர்த்தங்களினாலோ பெற்றாரை இழந்த பெண்பிள்ளைகளுக்காக விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஸ்தாபகரும் சமூகதீபமுமாகிய திரு க. சற்குணேஸ்வரன் அவர்களின் எண்ணத்திற்கமைவாக புதுக்குடியிருப்பு வாழ் பெரியோர்களின் அனுமதியுடன் அன்னை ஸ்ரீ சாரதா நிலையமானது முழுநேரச் சிறுவர் பராமரிப்பு நிலையமாக 2019 ஆண்டு சித்திரை மாதம் உருப்பெற்று 09.07.2019 ஆண்டு இராமகிருஸ்ண மிசன் சுவாமிகள், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தலைவர் சொ.கருணைலிங்கம் மற்றும் ஆலய அறங்காவலர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் மற்றும் அவருடன் உத்தியோகத்தர்கள், கலாநிதி சிவமோகன், மற்றும் ஊர்ப்பெரியவர்களின் வருகையுடன் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தலைவர் திரு.து. சுதர்சன் அவர்களின் தலைமையில் இந்நிலையமானது 42 பிள்ளைகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின் 2019 ஆண்டு 10ம் மாதம் சிறுவர் நன்னடத்தை பிரிவினரால் இந் நிலையம் பார்வையிடப்பட்டபோது இந்நிலையத்திற்கான நிரந்தரக்காணி, மற்றும் நிரந்தரக்கட்டடம் மற்றும் எப்பதிவுகளும் மேற்கொள்ளாமல் இயங்கிவந்ததனால் இந்நிலையமானது மூடப்பட்டது. இதன்பின் இந்நிலையமானது பிரதேச செயலகத்தில் 18.11.2019 ஆண்டு வலிந்துதவும் அமைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டது. பதிவு இல:MU/PKI/DS/VSSO/49

பின்னர் இந்நிலையத்தினை மீண்டும் 35 பிள்ளைகளுடன் அவர்களுக்கான கற்றலையும் போசாக்கான உணவினையும் வழங்கி அவர்களுக்கான மாற்றத்திற்கான வலுவூட்டும் நிலையமாக அமைப்பதற்கான தனது திட்டத்தினை முகாமையாளர் திருமதி ஜனனி ஜனகன் அவர்கள் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.க. பிரதீஸ்வரன் அவர்களுடன் ஆலோசித்து அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையம் என்ற பெயரில் 2020.12.13 திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

இந்நிலையத்தில் இணைந்த பிள்ளைகளுக்கு பாடசாலை சென்று வந்த பின்னர் அவர்களுக்கான போசாக்கு மிக்க உணவும், முக்கிய பாடங்களான 06 பாடங்களுக்கு சிறந்த ஆசிரியர்களை இந்நிலையத்திற்குள் உள்வாங்கி பிள்ளைகளுக்கு கற்பிப்பதுடன், பிள்ளைகளின் உளவளத்திற்கு யோகாக் கலையும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு கராத்தே கலையும் பயிற்றுவிப்பதுடன்,



விடுமுறை நாட்களில் கைத்தொழிற் பயிற்சிகளும், கணினிப்பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

எமது நிலையத்தில் இணையும் பிள்ளைகள் பலதரப்பட்ட சூழல்களில் இருந்து வருபவர்கள். ஒவ்வொரு பிள்ளையினதும் வீட்டு சூழல் படிப்பதற்கு ஏற்றவாறு காணப்படுவதில்லை. எமது பிள்ளைகள் பாடசாலையில் கற்கின்றார்கள், எமது நிலையத்தில் கற்கின்றார்கள். ஆனால் அவர்கள் சுயமாக கற்கப்போவது அவர்களின் வீடுகளில். ஆனால் இங்கு நாம் பார்க்கும்போது வறுமையின் விளிம்பில் வாழும் குடும்பத்தினரது வீடுகளில், வீட்டுப்பிரச்சினைகள், சண்டைகள், சாப்பாட்டில் பிரச்சனை, சூழல் பிரச்சினை இதனால் படிக்கவரும் எமது பிள்ளைகளின் வரவுகளில் பிரச்சினை, மனநிலைகளில் பிரச்சினை அப்படிப்பட்ட இங்குவரும் எமது பிள்ளைகளின் ஆரம்ப பாடசாலை கற்றலை பார்க்கும் போது வீடுகளிலும் பாடசாலைகளிலும் அந்தப்பிள்ளைக்கான கற்றல் சிறப்பாக சென்றடையாமல் காணப்பட்டது. இவையனைத்தையும் உடைய பிள்ளைகளே அனேகமானோர் எமது நிலையத்தில் இணைந்து கெள்கின்றார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை நன்னிலைப்படுத்தி கற்றலில் விருப்பத்தை ஏற்படுத்தி அவர்களை வழப்படுத்துவதில் மிக போராட்டத்தை எதிர்கொள்கின்றோம். அப்படியிருந்தும் எம் பிள்ளைகளின் நலனுக்காக சிறந்த மாற்றத்திற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து நல்லதொரு சமுதாயத்தை கட்டி எழுப்புதற்காக. பாடுபடுகின்றோம் எமது பிள்ளைகளுக்கு இங்கு வந்தவுடன் முதலில் அவர்களில் நடத்தை மாற்றம் ஏற்படுகின்றது. பாடசாலைகளில் சாரதா நிலையப் பிள்ளைகள் ஒழுக்கமானவர்கள் என்று கூறும்போது மனது பேருவகை கொள்கின்றது. அவ்வாறு பிள்ளைகளின் கற்றலில் உடன் மாற்றம் ஏற்படாவிட்டாலும் படிப்படியாக முன்னேற்றம் காணும் போது மனதுக்கு சந்தோசமாக உள்ளது. மற்றும் எமது நிலையத்தின் செயற்பாடுகளின் செலவினை பார்க்கும் போது எமது பிள்ளைகளின் அனைத்து தேவைப்பாட்டிற்கான செலவிற்காகவும், , ஆசிரியர்களின் சம்பளம் போன்ற பல விடயங்களில் நிதி சேகரிப்பதற்காக பல போராட்டங்களை எதிர்கொள்கின்றோம். இந்நிலையம் அனேகரது பார்வைக்கு வெறும் Tution Centre ஆக காணப்படுகின்றது. ஆனால் இது அவ்வாறான நிலையம் அல்ல. ஒவ்வொரு பிள்ளையினதும் உள்ளக்கிடக்கைகளை அறிந்து அவர்களுக்கு உரிய அறிவுரைகளை தேவையான நேரத்தில் வழங்கி அவர்களது கல்வியிலும் ஆரோக்கியத்திலும், நன்னடத்தையிலும் அக்கறை செலுத்தி சமூகத்தில் பெயர் சொல்லும் ஒரு பிள்ளையாக வளர்க்கும் இன்னுமொரு தாய்வீடாக எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் காணப்படுகின்றது.

அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் அனைத்து செயற்பாடுகளினதும் செயற்பாட்டு ஆவணங்களை விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு க. பிரதீஸ்வரனுக்கு அனுப்பி வைக்கப்படும். அவரும் அவரது குழுவினரும் அதனை பார்வையிட்டு அனைத்து ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் காலநேரம் பார்க்காமல் தருவார்கள். அதேபோல் எமது நிலையத்தின் தலைவர் பொன். பேரின்பநாயகம் மற்றும் நிர்வாக குழுவினர் சாரதா நிலையத்திற்கு வந்து குறை நிறைகளை அறிந்து அவர்களது ஆலோசனைகளை வழங்கி வருவார்கள். அதுமட்டுமின்றி 03 மாதத்திற்கு ஒரு தடவை மட்டக்களப்பு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் குழுவினர் வருகை தந்து கணக்காய்வு அறிக்கை, மற்றும் பிள்ளைகளின் செயற்பாட்டு ஆவணங்களை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கி செல்வார்கள். அதேபோல் எமது சாரதா நிலையத்தின் நிர்வாக குழு கலந்துரையாடலும் 03 மாதத்திற்கு ஒரு தடவை இடம்பெற்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆலோசனைகள் தரப்படும். இது மட்டுமில்லாமல் பிள்ளைகளின் கற்றல் முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் முகமாக ஆசிரியர் ஒன்றுகூடல், பெற்றார் ஒன்று கூடல் போன்றனவும் எமது நிலையத்தில் நடைபெறுகின்றது. இந்த செயற்பாடுகளின் சாராம்சம் ஆனது எமது நிலையத்தின் ஸ்தாபகர் திரு. க. சற்குணேஸ்வரனுக்கு அனுப்பி வைக்கப்படும் அவரும் அதனை பார்வையிட்டு தனது கருத்துகளை முன்வைப்பார். அதுபோல் 03 மாதத்திற்கு ஒரு தடைவ காலாண்டு அறிக்கை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினருக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக சமூகசேவைகள் அமைப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படும். அதே போல் எமக்கு



உதவி செய்து கொண்டிருக்கும் புலம்பெயர் உறவுகளும் எமது நிலையத்தின் செயற்பாடுகளை கேட்டறிந்து ஆலோசனைகளையும் ஆதரவுகளையும் தந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரினது பற்றுதலும் ஆதரவும், ஆலோசனைகளும் தான் எமது நிலையம் இந்த 05 ஆண்டு காலத்திற்கு இவ்வாறான ஒரு வளர்ச்சியை பெறக்காரணமாக இருந்தது.

எமது நிலையத்திற்கு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் அனுசரணையுடன் கொழும்பு மனிதநேய அமைப்பினர் எமது பிள்ளைகள் பல்துறையிலும் சிறந்து விளங்கவேண்டும் என்றும் கணினியின் முக்கியத்துவம் இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கணினிகளை தந்துதவியுள்ளார்கள். அதன் மூலம் எமது பிள்ளைகள் இப்போது பாடசாலைக் கற்றலுடன் கணினி அறிவையும் பெற்றுக்கொண்டு வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் எதிர்வரும் காலங்களில் பாடசாலையில் இருந்து இடைவிலகிய பெண்பிள்ளைகள் காலை வேளைகளில் கணினிப் பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கும் இக்கணினிகள் பாரிய உதவியாக இருக்கப் போகின்றது.

எமது நிலையத்திற்கு பல அன்புள்ளங்கள் வந்து எமது நிலையச் செயற்பாடுகளை பார்வையிடுவார்கள். பிள்ளைகளுக்கு பிடித்த உணவு, உடைகள், இனிப்புகளை வழங்குவார்கள். இவர்கள் எல்லோரையும் தாண்டி புலம் பெயர் நாட்டில் இருந்துகொண்டு அன்புமிக்க தகப்பனாக எமது நிலையப்பிள்ளைகளின் அனைத்து தேவைகளையும் கேட்டறிந்து அடிப்படைத் தேவைகளை, பூர்த்தி செய்து வரும் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் போசகர் வைத்திய கலாநிதி வே. பரமநாதன் அவர்கள் எமது நிலையத்திற்கு வருகை தந்து எமது பிள்ளைகள், படிப்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் மரத்திற்கு கீழ் இருந்து கஸ்டப்பட்டு படிப்பதை பார்த்து எமது செயற்பாடுகளை, மற்றும் செயற்திட்டங்களை கேட்டறிந்து உடனடியாக புதிய கட்டடத்தின் அத்திவாரம் கட்டுவதற்கு நிதி உதவியையும் கட்டடம் கட்டுவதற்கான உதவியையும் செய்வதாக கூறினார். அதற்கமைய அத்திவாரம் கட்டுவதற்கு என்று குறிப்பிட்ட தொகை நிதியினை உடனடியாக தந்துதவினார். அதேபோன்று அத்திவாரம் கட்டுவதற்கு இலண்டனில் வசித்துவரும் அன்புள்ளம் கெண்ட திரு. தி. உமாசுதன் அவர்களும் உடனடியாக நிதி உதவி செய்தார்கள். இவ்விரண்டு பேர் செய்த நிதி உதவியுடனும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் பங்களிப்புடனும் அத்திவாரம் கட்டப்பட்டது.

அதன்பின் அத்திவாரத்திற்கு பின்னரான மேல் கட்டடம் கட்டுவதற்கு பல உறவுகளிடம் நிதி உதவி கேட்கப்பட்டும் ஒருவருடகாலம் யாராலும் எவ்வுதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ சாரதா நிலைய வாடகை வீட்டிற்கான ஒப்பந்த காலமும் நிறைவடையவுள்ள காலப்பகுதியில் மீண்டும் வைத்திய கலாநிதி வே. பரமநாதன் அவர்கள் எமது நிலையத்திற்கு வருகை தந்தார்கள். புதிய கட்டடத்திற்கான அத்திவார கட்டுடனே காணப்படுகின்றது என்று கேட்டறிந்து கட்டட வேலையினை ஆரம்பிக்கும் முகமாக ஒரு தொகை நிதியை தந்துவிட்டு தானும் இலண்டன் சென்று நிதியுதவியினை தேடுவதாக கூறி சென்றார். அதன் பின் எமது பிள்ளைகளுக்கு மதிய நேர உணவினை வழங்கி உதவிகளை செய்து வந்த மற்றுமொரு அன்புள்ளம் நிறைந்த இலண்டனைச் சேர்ந்த பொருளியலாளர் கு. அருணகுமார் அவர்கள் நிலையத்திற்கு வருகை தந்து நிலைய செயற்பாடுகளை கேட்டறிந்ததுடன் அன்றே கட்டடம் கட்டுவதற்கு ஒரு தொகை நிதியினை தந்துதவினார். அதன் பின் வைத்திய கலாநிதி வே. பரமநாதன் அவர்களும், பொருளியலாளர் அருணகுமார் அவர்களும் இணைந்து கட்டடத்திற்கான உதவி செய்யும் அன்பு நிறைந்த சேவைமனமுடைய 06 பேரைக் கொண்ட குழுவினை உருவாக்கினார். இதில் வைத்திய கலாநிதி வே. பரமநாதன் பொருளியலாளர் கு. அருணகுமார், வைத்திய கலாநிதி ச. மயூரன், அமரர் திரு. சி.வரதராஜன் குடும்பத்தினர், திரு. கு.சபாரெட்ணம், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினர் அடங்குவர். இந்தக்குழுவினர் மிக மன சந்தோசத்துடன் எமது பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டு சாரதாகற்றல் மேம்பாட்டு நிலையம் கட்டப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கில் அதற்கான நிதியினை உரிய நேரங்களில் வழங்கி இக்கட்டடம் கட்டி முடிப்பதற்கு உதவியினை செய்துள்ளார்கள். இவர்களுடன் இணைந்து தொழில் நுட்ப உத்தியோகத்தர் ப. செந்தில்குமார் அவர்கள் சேவை செய்யும் மனதுடன் நேரகாலம் பார்க்காமல் முழு நேரமாக தன்னை அர்ப்பணித்து

கட்டடத்தினை சிறப்பாக வடிவமைத்து அக்கட்டடம் கட்டிமுடிக்கப்பட உறுதுணையாக இருந்துள்ளார். இதில் வைத்திய கலாநிதி வே பரமாநாதன் அவர்களும், பொருளியலாளர் அருணகுமார் அவர்களும், நேரகாலமின்றி தொழில்நுட்ப உத்தியோகத்தர் ப.செந்தில்குமார், நிறைவேற்றுப் பணிப்பாளர் க. பிரதீஸ்வரன் மற்றும் முகாமையாளர் திருமதி ஜனனி ஜனகன் ஆகியோரிடம் தொடர்புகளை மேற்கொண்டு கலந்தாலோசித்து கட்டடத்தின் கட்டுவேலை மற்றும் நிதி நிலமை போன்றவற்றை கேட்டறிந்து கொண்டு கட்டடத்தின் கட்டுமான வேலைகள் இடைநிறுத்தப்படாமல் அதற்கான ஒழுங்குகளை செய்து கொண்டு இருந்தார்கள்.

இந்தக்குழுவினருடன், விவேகானந்த சமுதாய அறக்கடளையின் ஸ்தாபகர் திரு க.சற்குணேஸ்வரன் அவர்கள் இக்கட்டடத் தொகுதிக்குள் ஆத்மீகத்தை வளப்படுத்த பிள்ளைகள் மனதில் ஆத்மீகமும் சேர்ந்து வளர வேண்டும் என்ற உன்னத நோக்கில் அன்னை ஸ்ரீ சாரதா தேவிக்கு ஒரு கோவில் ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு திரு.க.சற்குனேஸ்வரன், அமெரிக்காவை சேர்ந்த ரஞ்சன் வாமதேவன், விக்கினேஸ்வரன், இலண்டனைச் சேர்ந்த திருமதி மனோகரி அசோக்குமார் குழுவினரின் நிதிப்பங்களிப்பில் ஆத்மீக கட்டடமும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் செந்தில் குமாரின் வடிவமைப்பில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் கட்டுவதற்கு கட்டுமான வேலைகளை எந்த மன சலிப்புமின்றி அக்கட்டடத்தின் உறுதி அழகு அனைத்தையும் பார்த்து உருவாக்குவதில் திரு.செ.கிறிஸ்துராசா, திரு.மா.செல்வரட்ணம், திரு.கா.ரகுபதி ஆகியோரின் குழுவினர் எந்த வித மன சலிப்புமின்றி தங்களது சொந்த வீட்டினை கட்டும் அக்கறையுடன் குறித்த காலப்பகுதியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.ப.செந்தில்குமார் அவர்களின் வழிநடத்துதலில் சிறப்பாக கட்டி முடித்துள்ளார்கள்.

இக்கட்டடத்திற்கு தேவையான பொருட்களை தட்டுப்பாடின்றி குறைந்த விலையில் உரிய நேரங்களில் பெற்றுத் தந்த நா.ரதீஸ், (இந்து காட்வெயார்), திரு.ப.ஜிந்துசன் (மலர் கட்டடப்பொருள் வாணிபம், மரக்கலை), க. கிருஷ்ணகுமார், திரு.S.செபநாயகம், ம.கோணேஸ்வரன் (ஒட்டுவேலை), ஏ.சயந்தன் (அக்கினி எஞ்ஜினியரிங் பிறைவேற் லிமிட்டற்), S.ரதீசன் (மின் ஒட்டு), திலீப்(வர்ணப் பூச்சு), யு.விமலேஸ்வரன் (AVK கல் யாட்), வி. வரதகுமார் (மரக்கொள்வனவு), மு.கனோஜிதன், (சிமாட் ரெக்), நிசாந்தன் (தனா ரெக்னோலொஜி) உரிய நேரங்களில் கட்டடத்திற்கான பொருட்களை விநியோகம் செய்து கட்டடம் உரிய நேரத்தில் கட்டி முடிப்பதற்கு உதவி செய்துள்ளார்கள்.

இவ் அனைவரினதும் அயராத முயற்சியினால்தான் இந்த அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையமும், அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் கோவிலும் பல சேவைகளைப் புரிவதற்கு ராஜ கம்பீரத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது.

**எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் தனக்கொன்று ஒரு நிர்வாக கட்டமைப்பினை கொண்டுள்ளது.**


| | |
|---|---|
| **தலைவர்** | பொன். பேரின்பநாயகம்<br>(ஓய்வு நிலை பிரதி கல்விப்பணிப்பாளர்) |
| **உபதலைவர்** | சி. சுப்பிரமணியீஸ்வரன்<br>(ஓய்வுநிலை கோட்டைக்கல்விப் பணிப்பாளர்) |
| **செயலாளர்** | செ. மேகநாதன் (அதிபர்) |
| **பொருளாளர்** | ப. செந்தில்குமார்<br>(தொழில்நுட்ப உத்தியோகத்தர்) |
| **உள்ளக கணக்காய்வாளர்** | த. கோபாலசிங்கம்<br>(ஓய்வுநிலை உள்ளாட்டு இறைவரி சிரேஸ்ட ஆணையாளர்) |
| **ஆலோசகர்** | ச. நாகரெட்ணம்<br>(ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்) |
| | சி. பீதாம்பரம்<br>(ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர், தமிழ்) |
| | ஜெயம் ஜெகன்<br>(இயக்குனர் ஜெயம் நாடகக் கல்லூரி) |
| **நிர்வாக உறுப்பினர்கள்** | திருமதி. சிவபாக்கியம் ரவிச்சந்திரநாதன்<br>(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை) |
| | திருமதி. இந்திராணி முரளீதரன்<br>(ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியை) |
| | திருமதி. கார்த்திகா சசிதரன் |
| **முகாமைமாளர்** | திருமதி. ஜனனி ஜனகன் |
| **போசகர்** | பிரதேச செலயாலாளர் |
| **காப்பாளர்** | திரு. க. சற்குணேஸ்வரன்<br>(ஸ்தாபகர் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை) |
| | திரு. க. பிரதீஸ்வரன்<br>(நிறைவேற்றுப்பணிப்பளார், விவேகானந்த சமுதாய அறக்கட்டளை) |



## கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர் விபரம்

| பெயர் | தரம் | பாடம் |
|---|---|---|
| ஞ. சுபாங்கன் | 10, 11 | விஞ்ஞானம் |
| திருமதி. சா. காயத்திரி | 08, 09 | விஞ்ஞானம் |
| திருமதி. ர. சிவபாக்கியம் | 08, 09, 10,11 | கணிதம் |
| திருமதி. மு. இந்திராணி | 10, 11 | தமிழ் |
| செல்வி. ஆ. டினோஜா | 08, 09 | தமிழ் A/L<br>வரலாறு |
| அ. ஜீவகன் | 10, 11 | ஆங்கிலம் |
| ரி. யோகேஸ்வரன் | 08, 09 | ஆங்கிலம் |
| திருமதி. க. அனோஜா | 08, 09, 10,11 | வரலாறு |
| T. விமலரூபன் | 08, 09<br>குடியியல் | குடியியல் 10, 11<br>புவியியல் A/L<br>அரசியல் |
| மு. நாகேந்திரன் | 08, 09, 10 | கராத்தே |
| ஜெயம் ஜெகன் | 08, 09, 10 | யோகா |
| ஏ. கோகிலா | 08, 09, 10,11 | சங்கீதம் |
| சு. பிரதீபா | 08, 09, 10,11 | சமயம் |
| யு.நிலவன் | 08, 09 | கணினி |
| | | |

## இணைக்கப்பட்ட பிள்ளைகளின் உயர்ச்சி எண்ணிக்கை




**2026 61**



# எமது நிலையத்தின் இதுவரையான கற்றல் நிலை அடைவு

| Year | O/L | | A/L | | |
|---|---|---|---|---|---|
| | பரீட்சை எழுதியோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை | பரீட்சை எழுதியோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை | பல்கலைக்கழகம் தெரிவானோர் |
| 2022 | 11 | 08 | 08 | 08 | 04 |
| | வி.டர்மிகா | - | - | - | - |
| | வி.கானுஜா | 2B, 4C, 2S | வி.கானுஜா | Arts- B, C, S | |
| | உ.டினேஸ்கா | A, 5B, 3C | உ.டினேஸ்கா | E-Tech – 3S | |
| | சி.தர்சினி | 2A, 2B, 4C, S | சி.தர்சினி | E-Tech – 2C,S | University |
| | ர.சகானா | B, 2C, 6S | ர.சகானா | E-Tech – 2S | |
| | சா.ஜீவிதா | B, 2C, 3S | சா.ஜீவிதா | Arts – A,B, C | |
| | ஜெ.கீர்த்திகா | 2B, 6C, S | ஜெ.கீர்த்திகா | E-Tech – C, 2S | University |
| | சு.சுகிர்தா | B, 4C, 3S | சு.சுகிர்தா | Arts – B, 2C | University |
| | ர.தர்சிகா | 5A, B, C, 2S | ர.தர்சிகா | Arts – 2A, B | University |
| | த.சர்மிஜா | Fail | | | |
| 2023 | 08 | 07 | | | |
| | வி.டர்மிகா | 4C, 4S | | | |
| | ல.கயல்விழி | B,4C,3S | | | |
| | தே.கயல்விழி | B, 3C, 4S | | | |
| | சி. கனிமொழி | B, 3C, 3S | | | |
| | ப. சுடரினி | A, 5C, 3S | | | |
| | ச.தமிழரசி | Drop out | | | |
| | | | | | |
| 2024 | 05 | 04 | | | |
| | வி.பவிசனா | 7A, 2B | | | |
| | க.டனுசிகா | A, 5C, 3S | | | |
| | ரூ.எழில்துசா | A, 3B, 3C. 2S | | | |
| | ச.கேதுசாலினி | 3C, 3S | | | |
| | ந.மதுமிதா | Fail | | | |
| 2025 | 06 | 05 | | | |
| | க.சாம்பவி | A, 6C, S | | | |
| | இ.கலைநிலா | B, 5C, 2S | | | |
| | க.ஜதுர்சனா | 3C, 3S | | | |
| | ரா.வைஸ்ணவி | B, 4C, 3S | | | |
| | ம.துவாரகா | 3B, 3C, 2S | | | |
| | ரா.சுவேதா | C, 3S | | | |
| | | | | | |



## சிறப்பு தேர்ச்சி

வடமாகாண பாடசாலைப் பிள்ளைகளிற்கான கராத்தே போட்டி 22.07.2023, 23.07.2023 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது. இப்போட்டியில் எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலைய மாணவிகளில் 18 பிள்ளைகள் கலந்து கொண்டு 16 பதக்கங்களை வென்றெடுத்துள்ளார்கள்.

05.04.2024 ம் திகதி இடம்பெற்ற உலக சிலம்பம் போட்டியில் எமது நிலையத்தை சேர்ந்த 18 பிள்ளைகள் கலந்து கொண்டு 20 பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்

### பதக்கங்களின் விபரங்கள்:

| பெயர் | சிலம்பு | | |
|---|---|---|---|
| | தங்கம் | வெள்ளி | மண்ணிறம் |
| இ. வைஸ்ணவி | 01 | | |
| பி. கஸ்தூரி | 01 | | |
| க. பவிசனா | 01 | | |
| கு. ஓவியா | 01 | | |
| ர. ரம்மியா | 01 | | |
| அ. கதுசா | 01 | | |
| வி. டிலக்சனா | 01 | | |
| நி. கிருசா | 01 | | |
| யோ. தேனுஜா | 01 | | |
| கோ. நிசாந்தினி | 01 | | |
| ம. துவாரகா | 01 | | |
| ரா. கலைநிலா | 01 | | |
| ந. தகவினி | | 01 | |
| சி. சிவதர்சினி | | 01 | 01 |
| வி. அபிசனா | | 01 | 01 |
| ஜெ. ஜதுர்சினி | | 01 | 01 |
| ரா. சுவேதா | | 01 | 01 |
| வெ. விதுரா | | 01 | 01 |
| சர்மினி | | 01 | 01 |

**சிலம்பு**

**03 06 07**






| பெயர் | கராத்தே | | |
|---|---|---|---|
| | தங்கம் | வெள்ளி | மண்ணிறம் |
| நா. மதுமிதா | 01 | 01 | |
| ரூ. எழில்துசா | | | 01 |
| க. டனுசிகா | | | 01 |
| க. கேதுசாளினி | | | 01 |
| இ. வைஸ்ணவி | | 01 | |
| பி. கஸ்தூரி | | | 01 |
| க. பவிசனா | | 01 | |
| கு. ஓவியா | | | 01 |
| ர. ரம்மியா | | 01 | |
| அ. கதுசா | | 01 | |
| வி. டிலக்சனா | 01 | 01 | 01 |
| நி. கிருசா | 01 | | |
| யோ. தேனுஜா | | | 01 |

## கராத்தே

**11 02 07**




### அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் நடைபெறும் செயற்பாடுகள்

- பாடசாலை முடிந்து பிள்ளைகள் வந்தவுடன் அவர்களுக்கு போசாக்கு மிக்க மதியநேர உணவு வழங்கப்படுகின்றது.

- பாடசாலைக்கு பின்னர் பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப 06.30 மணி வரை அனைத்து பாடங்களிற்கான வகுப்புக்களும் நடைபெறும். (நேர அட்டவணை போடப்பட்டுள்ளது). விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ், வரலாறு, கணினி போன்ற பாடங்களுக்கு திறமைவாய்நத ஆசிரியர்களினால் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஏனைய பாடங்களுக்கான பயிற்சி புத்தகங்கள் வழங்கப்பட்டு பயிற்சிகள் செய்விக்கப்பட்டு அவர்களது கற்றல் நடவடிக்கைகள் குறையின்றி மேற்கொள்ளப்படுகின்றது.

- கற்றல் உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்படுகின்றது. (பாடசாலைக்கு கொண்டு செல்வதற்கும், பாடசாலைக்கு பின்னர் எமது நிலையத்தில் நடக்கும் அனைத்து பாடங்களிற்கும்).

- க.பொ.த. சாதாரண தர, க.பொ.த உயர்தர பிள்ளைகளுக்கு Pass paper class இற்கான ஒழுங்குகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

- வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் மு.ப 08.30 மணி தொடக்கம் பி.ப 05.30 மணிவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

- பிள்ளைகளுக்கான மாத அலகுப் பரீட்சை நடைபெறுகின்றது, தவணைப்பரீட்சை இடம்பெறுகின்றது.

- வாரத்தில் ஒரு நாள் கராத்தே, (அவர்களுக்கு வரும் ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு) யோகா (மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கும், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் ) நடைபெறுகின்றது.



மாதம் ஒரு நாள் வாழ்வியற்றிறன் பயிற்சி வழங்கப்படுகின்றது இதன் மூலம் பிள்ளைகளின் மனநிலையில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த நற்பிரஜையாக உருவாக்கல்.

பிள்ளைகளுக்கு அவசியமான பயிற்சிப்பட்டறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. (Counseling, பெண்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகளும் நிவர்த்திகளும்)

விடுமுறை நாட்களில் பிள்ளைகளுக்கான கைத்தொழில் பயிற்சிகள் வசதிக்கேற்ப வழங்கப்படுகின்றது.

பெற்றார் ஒன்று கூடல் நடைபெறுகின்றது, நிர்வாக ஒன்றுகூடல் நடைபெறுகின்றது.

மட்டக்களப்பு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப்பணிப்பாளர், அவர்களது குழுவினர் வருகை தந்து நிதி, மற்றும் அனைத்து ஏனைய செயற்பாடுகளையும் பார்வையிட்டு அதற்கான ஆலோசனைகளை வழங்கிவருகின்றனர்.

வருடத்திற்கு ஒரு முறை சுற்றுலாவிற்கு அழைத்துச்செல்லல்.

விசேட நாட்களுக்கு ஆடை வழங்கல்

## நிகழ்வுகள்



- புதுவருடம்
- அன்னை ஸ்ரீ சாரதா அம்மாவின் ஜெயந்தி
- தைப்பொங்கல்
- சித்திரை புதுவருடம்
- சிறுவர் தினம்
- ஆசிரியர் தினம்
- ஆடிப்பிறப்பு
- வாணிவிழா
- தீபாவளி
- பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் பிறந்த தினம்



## நிதி கிடைக்கப்பெறும் வழிகள்

1. விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, மட்டக்களப்பு
2. ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன், இலண்டன்
3. ச.சிறிகாந்தன், இலண்டன்
4. புலம்பெயர் உறவுகள்
5. புதுக்குடியிருப்பு பிரதேச உறவுகள்
6. இலங்கைவாழ் அன்பர்கள்



## சமுகப்பணிகள்

- எமது நிலையப் பிள்ளைகளின் வீடுகள் ஒவ்வொன்றிற்கும் பயன்தரும் மரக்கன்றுகள், பழக்கன்றுகள் வழங்கப்பட்டது

- பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த 05 பெண்களுக்கு (எமது பிள்ளைகளின் பெற்றார்) கோழிக்குஞ்சும், தோட்டம் செய்வதற்கு பயிர் விதைகள் பசளை வழங்கப்பட்டது.

- மாற்றுத்திறனாளி குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உலர் உணவு வழங்கப்ப்பட்டது.

- வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 03 கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த குடும்பத்தினருக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது

- முதியோர்களுக்கு வஸ்த்திர தானம் வழங்கப்பட்டது

- கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைக்கு படிப்பதற்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பொங்கல் பானை, பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டது.

**"அம்மா என்று அழைத்துக் கொண்டு என்னிடம்**
**வருபவர்கள் யாராக இருந்தாலும்**
**அவர்கள் அனைவரும் என் பிள்ளைகளே"**
**–தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி–**

திருமதி. ஜனனி ஜனகன்
முகாமையாளர்
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்



# எனது அனுபவமும் எனது ஆவலும்



கைவேலி புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீதரன் தர்சினி ஆகிய நான் எனது அனுபவத்தை இவ்விடத்தில் பகிர்வதற்கு சந்தர்ப்பத்தை தந்த இறைவனுக்கு முதலில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். எனது குடும்பத்தில் நானும் எனது அம்மாவும் அண்ணாவும் தான். எனக்கு 03 வயதாக இருக்கும் போது எனது அப்பா யுத்தத்தில் இறந்துவிட்டார். அம்மா என்னை கூலி வேலை செய்து படிப்பித்து வந்தார். நாங்களும் மிகவும் கஸ்டத்திலேயே வாழ்ந்து வருகின்றோம். நான் தரம் 11 படித்துக்கொண்டிருக்கும் போது அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் பற்றி அறிந்து இங்கு இணைந்து கொண்டேன். இங்கு எனக்கு கற்றலுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் அனைத்தும் தரப்பட்டது. சிறந்த ஆசிரியர்கள் மூலம் சிறந்த கல்வியும் வழங்கப்பட்டது. அதன் மூலம் நான் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்தில் பொறியியல் தொழில்நுட்பப் பாடத்தினைத் தெரிவு செய்து கற்றேன். உயர்தர பிரத்தியேக வகுப்பினை வெளியிலேயே கற்றேன். இதற்கான வகுப்பு கட்டணம் எனக்கு எமது நிலையம் மூலமாக தரப்பட்டது. அத்துடன் பொறியியல் தொழில்நுட்பப் பாடப்பிரிவிலுள்ள தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் (S.F.T) எனும் பாடம் கடினமாக உள்ளது என்று எமது ஜனனி மிஸ்ஸிடம் கூறியவுடன் அப்பாடத்தினை தெளிவாக கற்கவேண்டும் என்பதற்காக சிறந்த ஆசிரியரைத் தெரிவு செய்து எங்களுக்கு தனிப்பட்ட முறையில் வகுப்பு நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்து தந்தார். எமது நிலையத்தினூடாக பொறியியல் தொழில்நுட்பப் பாடத்தினை கற்று உயர்தரத்தில் சித்தியடைந்த தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளேன். ,தற்கு காரணம் எமது ஜனனி மிஸ் எங்கள் ஒவ்வொருத்தருக்காகவும் காட்டும் அக்கறையே.

எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் கல்வி மட்டுமல்லாது போசாக்கான உணவும், பாதுகாப்பும் சிறந்த முறையில் வழங்கப்பட்டது. அத்துடன் எங்களுக்கு யோகா, கராத்தே, சிரட்டைப்பயிற்சி, முதலுதவிப்பயிற்சி என்று அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டது. அத்துடன் எங்களது ஜனனி மிஸ் உயர்தரப் பரீட்சைக்குப் பின் புலம் பெயர் உறவுகளிடமிருந்து நிதி உதவியினைப் பெற்று எமது பிரதேசத்தில் இயங்கி வந்த விவேகானந்த சமுதாயக் கல்லூரியில் எங்களை இணைத்து கணினி அறிவையும் பெற்றுத்தந்தார். அத்துடன் ஒவ்வொரு விசேட தினங்களிலும் எங்களுக்கு புத்தாடை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் ஜனனி மிஸ் அன்பாகவும், அக்கறையுடனும் நடந்து கொள்வார். எங்களை நல்வழிப்படுத்தவதற்கான அறிவுரைகளை அன்புடனும், பொறுமையுடனும் கூறுவார். அத்துடன் சாரதா நிலையத்தில் பணிபுரியும் அனைவரும் அன்பாக நடந்து கொள்வார்கள். தற்போது எமது பல்கலைக்கழகப் படிப்பை தொடர்வதற்கான நிதியுதவியினை இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் மூலம் புலமைப் பரிசில் பெற்றுத் தருவதாகவும் ஜனனி மிஸ் கூறியுள்ளார். நான் பல்கலைக்கழகத்தினை சிறப்பாக கற்று முடித்து நல்லதொரு தொழிலினையும் பெறுவேன் என்று நம்பிக்கை உள்ளது. அதன்பின் எனது அம்மாவையும் குடும்பத்தையும் கவனிப்பதுடன் என்னை அரவணைத்து சென்று அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கும், அங்கு படித்துக் கொண்டிருக்கும் என்னைப்போன்ற பிள்ளைகளுக்கும் உதவி செய்து அவர்கள் வாழ்க்கையை சந்தோசப்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பம்.

இவ்விடத்தில் முக்கியமாக நான் ஒன்றை குறிப்பிட விரும்புகின்றேன் நாங்கள் படிக்கும்போது வாடகைக் கட்டடத்தில் மரத்திற்கு கீழ் இருந்துதான் படித்து வந்தோம். இன்று எமது நிலையத்திற்கு நிரந்தரக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதனை கட்டுவதற்கு உதவிசெய்த எல்லோருக்கும் பணிவு கலந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் சாரதா நிலையத்தில் இணைந்து கொண்ட நாள் முதல் இன்றுவரை நான் பல நன்மைகளைப் பெற்றுள்ளேன். எனது எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் துணை புரிகின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்வதுடன். என்னைப்போன்ற பிள்ளைகளை உருவாக்கும் எமது நிலையம் பல நூறு ஆண்டுகாலம் அதனது சேவையினை வழங்க வாழ்த்துகிறேன்.

ஸ்ரீதரன் தர்சினி
1ம் வட்டாரம்
கைவேலி



# அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையத்தின் உருவாக்கம்








அன்னை ஸ்ரீ சாரதா கல்வி மேம்பாட்டு நிலையம் 2021ம் ஆண்டு திறப்பு விழா









அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் நிர்வாகத்தினர்




அன்னை ஸ்ரீ சாரதா நிலைய ஆசிரியர்கள்

மாணவர்கள்






## கராத்தே பயிற்சியின் போது



## கராத்தே போட்டி





## யோகா பயிற்சியின் போது



## யோகா பரீட்சையின் போது





கணினி பயிற்சி



சர்வதேச சிலம்பப்போட்டியில்
பங்குபற்றியோர்



இந்தியதூதுவரால் கௌரவிப்பு



பிள்ளைகளுக்கும் பெற்றாருக்கும்
Counseling நடைபெற்றபோது



பயிற்சி பட்டறை





மனித நேய அமைப்பினரால் கணினி தரப்பட்டமை




முதலுதவிப்பயிற்சி பெற்ற சான்றிதழ்



சுற்றுலா



தைப்பொங்கல்




புதுவருடத்தின்போது



வாணிவிழா கொண்டாடப்பட்ட போது



தீபாவளி



ஆடிக்கூழ்





# சமுகப்பணி



கமுகம்பிள்ளை வழங்கியபோது



பழமரக்கன்று வழங்கிய போது



பிள்ளைகளின் பெற்றாருக்கு கோழிக்குஞ்சு வழங்கல்



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு பொங்கல்பானை வழங்கியமை



கொரோனா காலப்பகுதியில் உலர் உணவு பொதி வழங்கல்





முதியோருக்கான உணவு, பரிசுப்பொருள் வழங்கல்



தரப்பட்ட காணி துப்பரவு செய்யப்படல்



நிரந்தரக் காணிக்குள் குழாய்க் கிணறு அடித்த போது




எமது அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் நிரந்தரகாணிக்கு பெயர் பலகையிட்டமை



# அன்னை ஸ்ரீ சாரதா அருள்வளாகம்



நுழைவாயில்



அன்னை ஸ்ரீ சாரதா கற்றல் மேம்பாட்டு நிலையம்




சமுதாயக் கல்லூரி




விடுதி, கலாசார மண்டபம



பண்ணை, சுயதொழில் தொழிற்சாலை



## அறிமுகம் : எங்கள் நோக்கம் மற்றும் இலக்கு

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் உருவாக்கத்திலும், இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் மற்றும் பல புலம் பெயர் உறவுகள் பலரின் ஆதரவுடனும் கல்வி, வளர்ச்சி மற்றும் வலுவூட்டல் மையமாகத் திகழும் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

ஒவ்வொரு மாணவியும் அறிவாற்றலையும், திறன்களையும் பெற்று, தன்னம்பிக்கையுடன் தங்கள் எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்ளும் ஓர் இடமாக எங்கள் நிலையம் விளங்குகிறது.

## யாருக்கான நிலையம் இது? (Who We Serve)

போர் அல்லது இயற்கை அனர்த்தங்களால் பெற்றோரை இழந்த மாணவிகளுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகளுக்கும் ஆதரவளிப்பதே எங்கள் நிலையத்தின் முதன்மை நோக்கமாகும். பொருளாதாரச் சிக்கல்களால் மாணவிகளின் கல்வி தடைப்படுவதைத் தடுப்பதே எங்கள் இலக்கு. மாணவிகளை உள்ளீர்க்கும் போது பின்வருவனவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது:

o பெற்றோரை இழந்த மாணவிகள்
o பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள்
o பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள்

எங்கள் நிலையத்தில் இம்மாணவிகளின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை முறையாக வடிவமைத்துள்ளோம்.

## எங்கள் நிலையத்தில் ஒரு நாள்: கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

### கல்வி வலுவூட்டல் (Academic Empowerment)

எங்கள் நிலையத்தில் தரம் 8 முதல் 13 வரை பயிலும் மாணவிகளுக்குப் பல்கலைக்கழகக் கல்வி வரை செல்வதற்கான விரிவான ஆதரவை நாங்கள் வழங்குகிறோம். அவர்களுக்குத் தேவையான போசாக்கு உணவுடன் அனைத்து கற்றல் உபகரணங்களையும் வழங்குவதுடன், அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த முக்கியமான பாடங்களை மதியநேர உணவினை வழங்கிய பின்னர் பிரத்தியேக வகுப்புகளாக சிறப்பான ஆசிரியர்களை கொண்டு இலவசமாக நடத்துகிறோம்.





# முழுமையான வளர்ச்சி (Holistic Development)

மாணவிகளின் உடல், உள்ளம் மற்றும் ஆளுமை வளர்ச்சியை மையமாகக் கொண்டு பின்வரும் முக்கிய திட்டங்களைச் செயற்படுத்துகிறோம்

கராத்தே (தற்காப்புப் பயிற்சி) : மாணவிகளின் தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும் வளர்க்கவும், தற்காப்புத் திறனை மேம்படுத்தவும் இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது.

யோகா (உடல் மற்றும் உள ஆரோக்கியம்) : உடல் நலத்தையும், மன நலத்தையும் சமநிலையில் பேணுவதற்கு யோகா பயிற்சிகள் உதவுகின்றன.

வாழ்வியல் திறன் பயிற்சி (Life Skills) : மாணவிகளுக்கு அத்தியாவசியமான வாழ்க்கைத்திறன்கள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்காகப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன.

அடிப்படை கணினி பயிற்சி (Basic Computer Skill training) : தற்போது தரம் 6 இல் இருந்து கணினி என்பது ஒரு பாடமாக இணைக்கப்பட்டுள்ளது, அத்தோடு இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் அடிப்படையான ஒரு பகுதியாக கணினி உள்ளதால் பிரயோக ரீதியாக கணினி பயிற்சி வழங்கப்படுகின்றது.

தொழில் மற்றும் கைவினைப் பயிற்சிகள் (Vocational & Craft Training) எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு மாணவிகளைத் தயார்படுத்தும் நோக்கில், தரம் 11 பரீட்சை முடிந்தவுடன் மற்றும் பாடசாலையின் தவணைப்பரீட்சையின் பின்னரான நீண்ட விடுமுறை நாட்களில் ஒரு வாழ்க்கைத்தேர்ச்சி கைவினையாக்கமாக வழங்கப்படும் கழிவுப் பொருட்கள் மற்றும் தேங்காய் சிரட்டைகளைக் கொண்டு அழகிய கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிப் பட்டறைகள், தையல் வகுப்புகள், மற்றும் முதலுதவிப் பயிற்சி போன்ற நடைமுறைத் திறன் பயிற்சிகளை வழங்குகிறோம்.

இந்த அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு கட்டமைக்கப்பட்ட தினசரி அட்டவணையின்படி செயற்படுத்தப்படுகின்றன.



# தொடர்ச்சியான செயற்பாடுகளும் தேவைகளும்

- தினசரி வழங்கப்படும் உணவிற்கு நன்கொடைகள் தேவையாக உள்ளமையால் உங்கள் விசேட தினங்கள், நினைவு நாட்கள், மற்றும் ஏனைய விசேட நிகழ்வுகளை முன்னிட்டு உணவினை வழங்க முடியும்

- வருடாந்தம் மாணவிகளிற்கு விசேட கொண்டாட்டங்கள் (நத்தாருடன் புதுவருடம், தைப்பொங்கல், சித்திரைவருட பிறப்பு, தீபாவளி போன்ற 4 தடவைகளில் புத்தாடைகள் வழங்குவதற்கான உதவியினை வழங்கிடுங்கள்

- ஒவ்வொரு மாணவிகளுக்கும் வருடந்தோறும் பாடசாலை கற்றல் மற்றும் விசேட வகுப்புக்களிற்கு கற்றல் உபகரணங்கள், பயிற்சிப்புத்தகங்கள் தேவைப்டுகின்றது.

- உடல் சுத்தம் மற்றும் பெண்களின் சுகாதாரத்திற்கான அத்தியாவசிய பொருட்கள் தேவைப்பாடாகவுள்ளது.

- தினசரி மேலதிக வகுப்புக்களாக நடாத்தப்படுகின்ற 5 பாடங்களுக்குமான ஆசிரியர்களிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவிற்கான உதவியும், அத்தோடு விசேடமாக நடாத்தப்படும் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் மற்றும் கருத்தரங்குகளிற்கான உதவிகள் தேவையாக உள்ளது.

- கற்றல் தவிர்ந்து மேற்கொள்ளப்படும் கராட்டே, யோகா, சிலம்பு, வாழ்வியல் மற்றும் கணினிப் பயிற்சிகளுக்கான பயிற்றுனர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் தேவையாக உள்ளது.

- இந்த மேலதிக செயற்பாடுகளுக்காக வருடாந்தம் மாணவிகளுக்கான சீருடை, அத்துடன் அதற்காக பயன்படுத்தப்படும் கருவிகள், பொருட்கள் தேவையாக உள்ளது.

- மேலதிகமான செயற்பாடுகளான விளையாட்டுக்களுக்குத் தேவையான விளையாட்டுப்பொருட்கள் மற்றம் ஏனைய கருவிகள்

- மாணவிகளுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்குவதற்கான முதற்கட்டமாக வீட்டுத்தோட்டமாக மரக்கறி மற்றும் கோழிவளர்ப்புக்களை மேற்கொள்வதற்கான அடிப்படை கட்டமைப்புக்கள் மற்றும் மாதாந்த செலவுகள் முதற்கட்டமாக தேவைப்படும்.

- மாதாந்தம் ஏற்படுகின்ற பொதுவான நிருவாகச் செலவுகள் , நிரந்தர சேவையாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள்.





ASSC
ANNAI SRI SARADA CENTRE

# எங்கள் எதிர்காலத் திட்டம் : அன்னை சாரதா அருள்வளாகம்

எங்கள் நிலையத்திற்காகப் புதிதாகப் பெறப்பட்டுள்ள 2 ஏக்கர் நிலத்தில், “அன்னை சாரதா அருள்வளாகம்” என்ற பெயரில் ஒரு பெரும் வளாகத்தை உருவாக்கும் உன்னத நோக்கத்துடன் பயணிக்கிறோம். இது எங்கள் மாணவிகளின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான ஒரு முழுமையான மையமாக அமையும்.

இந்த வளாகத்தில் பின்வரும் முக்கிய கட்டமைப்புகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:



சிறுகைத்தொழில் உற்பத்திச் சாலைகள்
[ முல்லை உற்பத்திகள் ]



மாதிரிப் பண்ணை
[ முல்லைச் சாரதா சோலை ]



கலாச்சார மண்டபம்
[ சாரதா கலாச்சார மண்டபம் ]



மாணவிகளுக்கான தங்குமிடம்
[ சாரதா விடுதி ]



கல்வி மேம்பாட்டு நிலையம்
[ அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் ]



தொழிற்பயிற்சி நிலையம்
[அன்னை ஸ்ரீ சாரதா சமுதாய கல்லூரி]





# முழுமையான வளர்ச்சிக்கான தூண்கள்

மாணவிகளின் வளர்ச்சிக்கான இந்தப் பயணத்தில், நாம் ஒன்றிணைந்து உருவாக்கப்போகும் அடித்தளங்கள் ஐந்து முக்கிய தூண்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

1. அறிவு மற்றும் கல்வி வளர்ச்சி
2. திறன்கள் மற்றும் தன்னம்பிக்கை
3. உடல் மற்றும் மன நலம்
4. தொழிற்பாதை மற்றும் வருமானம்
5. பொறுப்பேற்றல் மற்றும் தலைமைத்துவம்

அன்னை ஸ்ரீ சாரதா நிலைய மாணவிகளின் எதிர்காலத்தை வெறும் கல்வியோடு மட்டும் நிறுத்தாமல், அவர்களை ஒரு முழுமையான ஆளுமையாக மாற்றுவதற்காகப் பின்வரும் ஐந்து அடிப்படைத் தூண்களின் கீழ் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.



ASSC
ANNAI SRI SARADA CENTRE

## 1 அறிவு மற்றும் கல்வி வளர்ச்சி (Knowledge & Educational Growth)

அறிவே வெற்றியின் முதற்படி, மாணவிகளின் கல்விப் பயணம் பாதியில் நின்றுவிடக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

கல்வி ஆதரவு : 8-ஆம் தரம் முதல் இணையும் மாணவிகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் விசேட வகுப்புக்கள் மூலம் பல்கலைக்கழக நுழைவு வரை வழிகாட்டுகின்றோம்.

## 2 திறன்கள் மற்றும் தன்னம்பிக்கை (Skills & Self-Confidence)

திறன்களே தன்னம்பிக்கையின் அஸ்திவாரம் சுயசார்புள்ள பெண்களாக மாணவர்களை உருவாக்குவதே எமது நோக்கம்.

தற்காப்புப் பயிற்சி: கராத்தே மற்றும் சிலம்பம் மூலம் உடல் வலிமையையும், ஆபத்துக்காலங்களில் அவர்களை பாதுகாத்துக்கொள்ளும் துணிவையும் வழங்குகின்றோம்.

கைவினைப் பயிற்சிகள்: தேங்காய் சிரட்டைப் பொருட்கள் தயாரிப்பு, தையல் கலை போன்ற வாழ்வாதாரப் பயிற்சிகள் மூலம் அவர்களின் எதிர்கால பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்கின்றோம்.

## 3 உடல் மற்றும் மன நலம் (Physical & Mental Well-being)

ஆரோக்கியமான உடலில் அமைதியான மனம் மகிழ்ச்சியான சூழலே சிறந்த கற்றலுக்கு வழிவகுக்கும்.

மன ஒருமைப்பாடு : யோகா மற்றும் தியானப் பயிற்சிகள் மூலம் மன அழுத்தத்தைக் குறைத்து, படிப்பில் கவனத்தை அதிகரிக்கச் செய்கின்றோம்.

ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் : போசாக்கு மிக்க உணவு, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள் மூலம் ஒரு பாதுகாப்பான, அன்பான இல்லமாகச் செயற்படுகின்றோம்.

## 4 தொழில்பாதை மற்றும் வருமானம் (Career Path & Livelihood)

உழைப்பால் உயர்வோம். வெறும் பட்டங்களுடன் நிற்காமல், வருமானம் ஈட்டும் ஆற்றலை உருவாக்குகின்றோம்.

மாதிரிப் பண்ணை: எமது 2 ஏக்கர் காணியில் அமையவுள்ள மாதிரிப் பண்ணை மூலம் நவீன விவசாய முறைகளைக் கற்றுத் தருகின்றோம்.

தொழில் வழிகாட்டல் : (VCOT கல்லூரிகளின் நிபுணத்துவத்துடன்) எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான தகுதிகளை வளர்க்கின்றோம்.

## 5 பொறுப்பேற்றல் மற்றும் தலைமைத்துவம் (Responsibility & Leadership)

சமூகத்தை வழிநடத்தும் ஆளுமை. தன்னையும், தன் குடும்பத்தையும், சமூகத்தையும் வழிநடத்தும் தலைவிகளாக உங்களைச் செதுக்குகின்றோம். இது எதிர்காலத்தில் சாரதா நிலையத்தை நிருவகிக்கும் பொறுப்பானவர்களையும் உருவாக்கும்.

முடிவெடுத்தல் : வாழ்வியல் திறன் பயிற்சிகள் (Life Skills) மூலம் சவால்களை எதிர்கொள்ளவும், சரியான முடிவுகளை எடுக்கவும் பயிற்றுவிக்கின்றோம்.

முடிவெடுத்தல் : வாழ்வியல் திறன் பயிற்சிகள் (Life Skills) மூலம் சவால்களை எதிர்கொள்ளவும், சரியான முடிவுகளை எடுக்கவும் பயிற்றுவிக்கின்றோம்.

சமூகப் பொறுப்பு : முதலுதவிப் பயிற்சிகள் மற்றும் கலாச்சார விழாக்கள் ஊடாகச் சமூகத்தின் மீது அக்கறையுள்ள குடிமகள்களாக மாற்றுவதுடன் சாரதா நிலையத்தினை எதிர்காலத்தில் கட்டமைத்து நிருவகிக்கும் பெண்கள் சக்தியாக உருவாக்குகின்றோம்.



## Socio Economic Development

VCOT
LEARN TO LEAD, LIFT LIVES
EDUTECH

SWO VCOT
Technical & Vocational Training - NVQ

VCOT VCC
Community Colleges

VCF

ASSC ANNAI SRI SARADA CENTRE

Education and Community Development

industrial partner
amirda

மாற்றம்
Media Partner (Maatram News)



**Donate**

A/C Name : Vivekananda Community Foundation
A/C No : 075-1-001-8-0065430
Swift Code : PSBKLKLX
Bank : People's Bank, Batticaloa

**Please contact for further clarifications**
**WhatsApp | Viber | Mobile |**
**+94 77 677 0780**



ASSC
ANNAI SRI SARADA CENTRE

www.assclk.org

Waed No 1, Vernavil Puthukudiyiruppu | +94 76 710 7637 | saradacentre.org@gmail.com

VIVEKANANDA COMMUNITY FOUNDATION

VCOT
LEARN TO LEAD, LIFT LIVES